கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(20.10.2019 - 20 ஐப்பசி 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 10, கதிர் - 218, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05






# நான் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவன் அல்ல!

## ஊடகவியலாளர் சந்திப்பின் போது...

நான் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவன் அல்ல! எனது பெயரைப் பாவித்து சில அரசியல் கட்சிகள் பிரசாரம் செய்ய முயல்வது தவறு!! அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை ஊடகவியலாளர்களை சந்தித்து இவ்வாறு கூறினார். தொடர்ந்து அவர் கூறுகையில், தேர்தல் பிரசாரத்தில் போஸ்டர் பிரதிகளில் எனது பெயரைப் பிரசுரித்து அரசியல் இலாபம் தேட முயல்வது தெரியவந்துள்ளது. நான் எந்த அரசியல் கட்சியையும் சாராதவன். எனது பெயரைப் பாவித்தல் தவறான செயலாகும். மேலும் கடந்த காலத்தில் கத்தோலிக்க திருச்சபை ஆளும் கட்சி, பிற கட்சிகளுடன் விருப்பு, வெறுப்புகளில் கலந்துரையாடல், தோழமை கொண்டதை வைத்துக்கொண்டு தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி நான் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அவர்களுக்கு ஏற்றவிதத்தில் தீர்மானிப்பது, அதை வெளியிடுவது தவறான ஒன்றாகும்.

எமது இணையத்தளம் www.archdiocese of colombo, முகநூல் News - archdiocese of colombo என்பதைத் தவிர வேறு எந்த ஒரு இணையத்தள இணைப்புகளும் இல்லை. எனது பெயரைப் பாவிக்கும் யாருக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன்!! என்று ஊடகவியளாளர்கள் சந்திப்பின் போது கர்தினால் ஆண்டகை தமது கருத்துக்களைத் தெரிவித்தார்.

தகவல் மற்றும் படம் : T. சுனில்

## தேசிய திருத்தலமாக பிரகடனம்



கந்தானை புனித செபஸ்தியார் தேவாலயம் தேசிய திருத்தலமாக பிரகடனப்படுத்தப்பட்டது! கந்தானை புனித செபஸ்தியார் தேவாலய பங்குதந்தை நிசாந்த ருந்திகோ அடிகளாரினால் திருத்தலமாக உயர்த்தக் கோரி ஆவணம் ஒன்று, கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர். அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களிடம் ஒப்படைத்ததற் கிணங்க, பேராயரினால் கந்தானை புனித செபஸ்தியார் தேவாலயத்தை....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## மறைசாட்சிகளின் உயிர்த் தியாக நம்பிக்கை ஒவ்வொருவரையும் இறை அருளால் நிரப்புவதாக!

மன்னார் மறைமாவட்டத்தில் தோட்டவெளி மறைசாட்சிகளின் 475 வது ஆண்டு நிறைவு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (29.09.2019) அன்று மன்னார் மறைமாவட்ட திருஅவையினால் பெருவிழாவாக கொண்டாடியபோது பெருவிழா திருப்பலி வேளையில் மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை தனது மறையுரையில் தெரிவித்ததாவது, மறைசாட்சிகளின் உயிரத் தியாக நம்பிக்கை ஒவ்வொருவரையும் இறை அருளால் நிரப்புவதாக. மறைமாவட்டத்தில் நாங்கள் புதுப்பித்தல் ஆண்டாகப் பிரகடனப்படுத்தி அதை வாழ்ந்து வருகின்ற இவ்வேளையில்...

தொடர்ச்சி 2ம் பக்கம்..



## ஆன்மாக்களின் தினம் – கார்த்திகை 2ம் திகதி

**பொரளை கல்லறையில் வழிபாடுகள்**

கார்த்திகை மாதம் 2ம் திகதி மாலை 4.00 மணிக்கு செபமாலையும், 4.30 மணிக்கு திருப்பலியும் கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு ஜே.டீ அந்தனி ஜெயக்கொடி ஆண்டகையின் தலைமையில் நடைபெறும். இறுதியில் கல்லறைகள் ஆசீர்வதிக்கப்படும்.

**மாதம்பிட்டி கல்லறையில்**

கார்த்திகை மாதம் 2ம் திகதி மாலை 3.15 மணிக்கு செபமாலையும், 4.00 மணிக்கு திருப்பலியும் கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறும்.



## புதிய நியமனம்



இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்திற்கான பல்சமய ஒன்றிணைப்பு ஆணைக்குழுவின் தேசிய இயக்குனராக அருட்பணி. மைக்கல் இராஜேந்திரம் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். இவரை ஞான ஒளி வாழ்த்தி நிற்கின்றது.

## புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா திருவிழா



புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலயத்தின் 199வது வருடாந்த திருவிழா 2019.10.06 அன்று கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் காலை 8.00 மணி திருவிழா பாடற் திருப்பலியில்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## பாஸ்கு ஞாயிறு குண்டுத்தாக்குதலால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான திருயாத்திரை

கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திலும், நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்திலும்...

15



## இறைபதம் அடைந்தார்

இந்தியா திருச்சி மறைமாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் ஆயர் அந்தோனி டிவோட்டா ஆண்டகை 15.10.2019 அன்று காலமானார். 1943ம் ஆண்டு ஆனி மாதம் 30ம் திகதி தூத்துக்குடியில் பிறந்த ஆயர் டிவோட்டா அவர்கள், 1971ம் ஆண்டு அருள்பணியாளராகவும், 2001ம் ஆண்டு தை 28ம் திகதி திருச்சி மறைமாவட்ட ஆயராகவும் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர், திருச்சி மறைமாவட்டத்திற்கு ஆயராகத் திருநிலைப்படுத்தப்படுவதற்குமுன், சென்னை - மயிலை உயர்மறைமாவட்டத்தில்

தொடர்ச்சி 15ம் பக்கம்..



**விண்ணையும், மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவரே எனக்கு உதவி (தி.பா 91)**

# கொழும்பு உயர்மறைமாவட்ட அப்போஸ்தலிக்க மறைக்கல்வி பணியக அறிவித்தல்

### க.பொ.த. சாதாரணத் தர மாணவர்களுக்கான மீட்டல் வகுப்பு

2019ம் ஆண்டு மார்கழித் திங்கள் க.பொ.த சாதாரணத் தரப் பரீட்சை நடைபெறவுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் இப்பரீட்சைக்கு தோற்றவிருக்கும் அனைத்து கத்தோலிக்க மாணவர்களுக்காகவும் மீட்டல் வகுப்பொன்று மறைக்கல்விப் பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அனைவரும் வருகைத்தந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நாள் : 2019 ஐப்பசி 26ம் திகதி**

**இடம் : புனித வியாகுல மாதா ஆலய பங்கு மண்டபம்**

**நேரம் : காலை 8.00 – மதியம் 2.00 மணி வரையில்**

குறிப்பு: கட்டணம் இலவசம். வகுப்பு சிறப்பாக அமைந்திட, ஐப்பசி மாதம் 18ம் திகதிக்கு முன்பதாக தங்கள் பாடசாலையிலிருந்து வருகைத்தரவிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பாடசாலை விபரங்களை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறியத்தரவும். 0779752143

**அதி. வண. மனோகுமாரன் நாகரட்ணம்**

**கொழும்பு உயர்மறைமாவட்டம் மறைக்கல்விப் பணியகம்**

**ஆயர் இல்லம், கொழும்பு 08.**

## கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதி சான்றிதழ் தேர்வு – 2019

இலங்கை கல்வித் திணைக்களத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படும். மறைப்பாடசாலை இறுதி சான்றிதழ் தேர்வு இம்மாதம் (ஐப்பசி) 26ம் திகதியும் (சனிக்கிழமை) எதிர்வரும் மாதம் (கார்த்திகை) 2ம் திகதியும் (சனிக்கிழமை) என இரு நாட்களாக நடைபெற உள்ளது. பரீட்சைக்குத் தோற்ற இருப்பவர்களுக்கான பரீட்சை அனுமதி பத்திரம் பங்கு தந்தையர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**அருட்சகோதரி. ரஞ்சி போல்துரை**

**தேசிய மறைக்கல்வி நடுநிலையம்.**

## பாவ இருளில் நிறைந்துள்ள இவ்வுலகை ஒளியாக்க குருக்களாகிய, துறவிகளாகிய நாம் அழைக்கப்பட்டுள்ளோம்!



பாவ இருள் நிறைந்த இந்த உலகை, சமூகத்தை ஒளியாகமாற்ற அர்ப்பணமும் நேரம் செலவிடுதலும் குருக்கள் துறவிகளாகிய எமது அழைத்தலும் கடமையுமாகும். காலி மறைமாவட்ட ஆயர் தேமகு. றேமன்ட் விக்ரமசிங்க ஆண்டகை அவர்கள் கடந்த வாரம் பல்லன்சேனையில் பிரன்சிஸ்கான் சபையில் புதிய தேவாலயம் அர்ச்சிப்பு வழிபாட்டின்போது கூடியிருந்த குருக்கள், அருட் சகோதரரிகளிடம் இவ்வாறு தெரிவித்தார்கள். தொடர்ந்து கூறுகையில் குருக்கள், துறவிகள் என்ற ரீதியில் எமது சேவையை முடியுமான அளவுக்கு உயர்ந்ததாக இறைவனுக்கு வழங்கமுனைப்புடன் ஈடுபட வேண்டும். எம்மைத் தேடிவரும் மக்களை புரிந்து அவர்களின் பிரச்சனைகளுக்கு விடைகாண உதவுவது எம் அழைத்தலின் பகுதியாகும். பிரன்சிஸ்கன் சபை அருட்தந்தை மாலக்க லெனாட் பர்னாந்து இன்னும் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## கொழும்பு பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் கல்லூரியில் உறுதிப்பூசுதல் வைபவம்



இறைவன் எமக்குத்தந்திருக்கும் அடையாளத்துடன் அவரின் திட்டத்தை அறிந்து வாழ்க்கையை வெற்றிக்கொள்ள உதவுவது கத்தோலிக்கராகிய எமது கடமையாகும் என அதி. மேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கொழும்பு பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் கல்லூரியில் உறுதிப்பூசுதல் திருப்பலி மறையுரையின்போது தெரிவித்தார்கள்.

எமது நாட்டு எதிர்காலத்தை பாரம் எடுக்க இருக்கும் இளம் பிள்ளைகளாகிய நீங்கள் உங்கள் கல்வி கற்றலை சரியான முறையில் முன்னெடுத்து, உங்கள் ஒவ்வொருவரினதும் அழைத்தல் எது என நன்றாக அறிந்து வாழ்வை வெற்றியாக்குவது இறைவனின் விருப்பமகும்.

திருக்குடும்ப கல்லூரியில் 19 மாணவிகள் கர்தினாலினால் உறுதிப்பூசுதல் பெற்றதுடன் பம்பலப்பிட்டி பங்குதந்தை பிலிசியன் ரஞ்சித் பெரேரா அடிகளாருடன் அருட்தந்தை வின்சன்ட் ஆஸ்லி அடிகளாரும் பரிபாலகர் அருட்தந்தை டெனிஸ்டன் சுபசிங்க அடிகளாரும் பெற்றோரும் கலந்து கொண்டனர். அவர்களுடன் கல்லூரி அதிபர் ரூபா பர்னாந்து அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

**தகவல் மற்றும் படம் : T. சுனில்**



## முதல்நன்மை திருப்பலி

கொம்பனித்தெரு புனித செபமாலை அன்னை ஆலயத்தில் முதன் முதலாக ஆண்டவரை திவ்விய நற்கருணை வாயிலாகப் பெற்றுக்கொண்ட சிறுவர்களையும், பங்குத்தந்தை பீற்றர் சுபராஜ் அடிகளாரையும், உதவிப்பங்குத்தந்தை டொன் ஜானக்க ஜயமால் அடிகளாரையும் படத்தில் காணலாம்.

**படம் : டிக்சன் பர்னாந்து**

✞✞✞✞✞✞

## 01 மறைசாட்சிகளின்...

இந்த யூபில் ஆண்டு எமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு புதுப்பித்தல் பெறுவதற்கு பெரும் உறுதுணையாக இருக்கு வேண்டும் என நான் ஆசீத்து நிற்கின்றேன். புனித பேதுறுவின் திருமுகத்தில் நீதியின் பொருட்டில் துன்புற வேண்டியிருப்பினும் நீங்கள் பேறுபெற்றவர்கள் என கூறப்படுகின்றது. இறை இயேசுவின் வார்த்தை மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக் கொள்ளுபவரே விண்ணுலகில் இருக்கும் என் தந்தையின் முன்னிலையில் நானும் அவர்களை ஏற்றுக் கொள்ளுவேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வார்த்தைகள் மூலம் எமக்கு எவ்வாறான அழைப்பை தருகின்றார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். உடலை கொன்றாலும் ஆன்மாவை கொல்லாமல் இருப்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம் என்று கூறுகின்றார். இன்றை திருப்பலி வாசகங்கள் எம்மை ஒரு சாட்சிய வாழ்வுக்கு அழைக்கின்றன. சாட்சியம் திருச்சபையில் ஆரம்பத்திலிருந்தே தொடர்ந்து வந்துள்ளது.. கிறிஸ்துவத்தில் முதல் மூன்று நூற்றாண்டிலிருந்து இருந்து வந்தது என்னவென்றால் கிறிஸ்துவுக்காக உயிரை கொடுப்பது மறைசாட்சிகள் ஆகும். உரோமை மகன் அரசமயமாக இருந்தவேளையில் பலர் கிறிஸ்துவத்தை பின்பற்றியபோது உரேமை ஆட்சியாளர்களுக்கு பயத்தைக் கொடுத்தது. எனவே கிறிஸ்துவத்தை முடக்கின்ற முயச்சியில் இறங்கியதால் வேத கலாபனை என அழைக்கப்படுகின்றது.

கிறிஸ்தவர்களை முழுமையாக கண்டித்த அரசர்களில் ஒருவன் நீரோ. இவன் கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதற்காக பல கொடுமையான வழிகளை கையாண்டதாக வரலாறு தெரிவிக்கின்றது. கிறிஸ்தவர்களின் மீது காட்டு மிருகங்களின் தோல்களை போட்டு அவர்களை வேட்டை நாய்களுக்கு முன்பு விடுவார்களாம். வேட்டை நாய்களோ மிருகங்கள் வருகின்றன என எண்ணி இவர்களை சாகடிக்குமாம். அத்துடன் கிறிஸ்தவர்களை சிலுவையில் அறைந்த பழக்கமும் இருந்திருக்கின்றது. உயிரோடும் இவர்கள் எரிக்கப்பட்டிருக்கின்றார்கள். கை கால்கள் வெட்டப்பட்டு கொடூரமாக சாகடிக்கப்பட்டுள்ளனர். மின் கம்பங்களில் கட்டப்பட்டு தீப்பந்தமாய் எரிக்கவும் பட்டுள்ளனர். அத்துடன் இவர்கள் தங்கள் சொந்த குடுப்பத்தாலும் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளனர். இவர்களின் எதிர்ப்புக்களையும் இவர்கள் சந்திக்க நேரிட்டுள்ளது.

இவ்வாறு மறைசாட்சிகளாக மரித்தவர்கள் அனுபவித்த துன்பங்கள் பல பல. இவ்வாறு பல துன்பங்களையும் வேதனைகளையும் இறை அன்பின் காரணமாக இவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். பல்வேறுபட்ட துன்பங்கள் மூலம்தான் நாம் இரட்சிக்கப்படுவோம் என திருத்தூதர் பணியில் நாம் பார்க்கின்றோம். உண்மையில் நாம் கடவுளுக்கு எம்மை விதையாக கொடுப்பதன் மூலம் நாம் அவரிடம் பல அருங்கொடைகளை பெற்றுக் கொள்ளுகின்றோம். இதைத்தான் இயேசு எமக்கு வெளிப்படுத்தியிருக்கின்றார். சாகத் தயாரக இருப்பவர்தான் பல வருட வாழ்வை பெற முடியும் யோவான் நற்செய்தியில் கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலைக் கொடுக்கும்.

தொண்டராக இருக்க தயாராக இருக்க விரும்புவர்தான் பெரியவராக இருக்க முடியும். என் விருப்பமல்ல உமது விருப்பப்படி நடக்கட்டும் என்று அன்று இயேசு பிராண் இவ்வாறு தெரிவித்ததையும் நமக்குத் தெரியும். தியாகம் என்பது அடிப்படையில் நமக்கு பிடித்தது ஒன்று மற்றவர்களுக்காக இழக்க தயாராக இருப்பது. ஆனால் அதையும் தாண்டி இன்னுமொரு ஆழமான அர்த்தம் இருக்கின்றது. இந்த தியாகம் என்பது ஒருவரை புனிதப்படுத்துவதாகும். நாம் எந்தளவுக்கு தியாகம் செய்ய முன்வருகின்றோமோ அந்தளவுக்கு நம்மையும் மற்றவரையும் புனிதப்படுத்துகின்றோம் என அர்த்தமாகும்.

மன்னார் மறைமாவட்டத்தில் தாங்கள் சிந்திய இரத்தத்தால் மன்னார் மண்ணை மட்டுமல்லாமல் வட மாகாண மண்ணை மட்டுமல்லாது ஒட்டு மொத்த மனித குலத்தையே புனிதப்படுத்தியுள்ளனர் என நாம் சொல்லலாம். எமது தியாக வாழ்வால் எம்மையும் மற்றையவர்களையும் புனிதப்படுத்த முன் வருவோம். எமது நாட்டிலே மன்னாரில் 600 க்கு மேற்பட்ட ஆண், பெண் சிறுவர்கள் மறைசாட்சிகளைப்போல யாழ் மாவட்டத்திலும் பலர் உயிர் தியாகம் செய்துள்ளார்கள்.

டச்சுக் காலத்திலும் எத்தனையோ பேர் உயிர் தியாகம் செய்துள்ளனர். கடந்த முப்பது வருட காலத்திலே பல்லாயிரக்கணக்கான மக்களும் தங்கள் உயிர்களை இழந்துள்ளனர். இவ் வருட பாஸ்கா விழாவின்போது ஏற்பட்ட குண்டு தாக்குதலில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். அவர்களின் அந்த உயிர் தியாகங்களின் வழியாக நாமும் புனிதப்படுத்தப்பட வேண்டும் என இறைவனிடம் மன்றாடுவோம்.

கடந்த புதன் கிழமை பரிசுத்த பாப்பரசர் தனது ரியூட்டர் செய்தியில் மறைசாட்சிகள் அன்பின் இடமான சக்திக்கும் தூய ஆவியானவரின் குரலுக்கும் விசுவாசமாக இருந்தவர்கள். மறைசாட்சிகளின் வீரத்துவ வாழ்வு ஒவ்வொரு நாளும் நற்செய்தியன்படி வாழ்வதற்கு எவ்வாறு உதவி செய்கின்றது என்பதை சிந்திக்குமாறு திருத்தந்தை எம்மை கேட்டுக் கொண்டார்.

ஆகவே நாமும் மன்னார் மறைசாட்சிகள் விரைவில் புனிதர்கள் பட்டம் பெற மன்றாடுவோம். இதற்காக வத்திக்கானிலும் உரோமாபுரியிலும் செயல்படுவோர்களுக்காகவும் இவர்களுக்கு தூய அவியானவரின் தூண்டுதல் பெறவும் நாம் மன்றாடுவோம்.

பரிசுத்த பாப்பரசரின் வேண்டுகோளுக்கிணங்க 2019 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தை மறைபரப்பு மாதமாக நாம் அனுசரிப்போம். நாம் எமது மறைமாவட்டத்தில் புதுப்பித்தல் ஆண்டாக இவ் ஆண்டில் செயல்படும் வேளையில் எமது வாழ்வால் மற்றவர்களை எவ்வாறு புனிதப்படுத்த முடியும் என சிந்தித்து செயல்படுவோம் என இவ்வாறு தனது மறையுரையில் தெரிவித்தார்.

**தகவல் : அருட்பணி. லக்ஸ்டன் டி சில்வா.**

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
20 ஐப்பசி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# மறைபரப்பாளர்களே! தூய ஆவியின் குரலுக்கு செவிகொடுத்து வாருங்கள்...

"நீங்கள் திருமுழுக்குப் பெற்று அனுப்பப்படுகிறீர்கள்" என்ற தலைப்பிலே இம்மாதம் முழுவதும் நாம் மறைபரப்பு மாதத்தைக் கொண்டாடுகின்றோம். அந்த வகையிலே ஒவ்வொரு வருடத்தைப் போலவும் இம்மாதம் 20ம் திகதி மறைபரப்பு ஞாயிறு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. மறைபரப்பு பற்றி எமது திருத்தந்தை பின்வருமாறு கூறுகின்றார். திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்கு இலவசமாகக் கிடைத்த விசுவாசத்தைச் சான்று பகரக்கூடிய விதமாக வாழ்ந்து காட்ட வேண்டும். சிறப்பாக தம்மை அர்ப்பணித்துள்ள சகல துறவறத்தாரும் இதை வாழ்ந்து காட்டவேண்டும். துறவற அர்ப்பண வாழ்வுக்கும், மறைபரப்புக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. மிக நெருக்கமாக இயேசுவைப் பின்பற்றும் அர்ப்பணிக்கப்பட்ட ஒருவரின் வெளிப்பாடு முதலில் அவரின் அழைப்புக்கு பதில் கொடுத்தல், பின்னர் சிலுவையைச் சுமந்து அவரைப் பின் தொடர்தல், நற்செய்தி அறிவிக்கும் முகமாகத் தம் வாழ்வை இழத்தல் இயேசுவின் வாழ்வில் இந்த மறைபரப்புத் தன்மைகள் தெட்டத் தெளிவாக விளங்கின. எனவே அவரைப் பின்பற்றும் அனைவரிலும் இந்த மறைபரப்புத் தன்மை தெட்டத் தெளிவாகக் காணப்பட வேண்டும்.

திருச்சபைக்கே உரித்தான இந்த பரிமாணம் அர்ப்பணிக்கப்பட்ட எல்லா நிலைகளிலும் காணப்பட வேண்டும். மறைபரப்பாளர்கள் எனும்போது அவர் வெறுமனே மதம் மாற்றுபவர் என்று கொள்ளக்கூடாது. மறைபரப்பு என்பது விசுவாச வாழ்வுக்கு இலக்கணமானது, மிக முக்கியமானது அவர்கள் தூய ஆவியின் குரலுக்குச் செவி கொடுத்து வாருங்கள், முன்னேறுங்கள் என்று செயற்பட வேண்டும் என்கிறார். எனவே இம்மாதத்தில் மறைபரப்பு ஞாயிறன்று எம்மால் முடிந்தளவு நற்செய்தியைப் பரப்புவோம், துறவறத்தார்க்காக மன்றாடுவோம். பல உதவிகளை அவர்களுக்காக வழங்குவோம்.

மேலும் இம்மாதம் முழுவதும் செபமாலை மாதமாகவும் நாம் கொண்டாடிக்கொண்டிருக்கின்றோம். செபமாலை செபித்து அதன் வழியாக நன்மைகள் பெற்றவர்கள் ஏராளம். இன்றைய உலகிலே செபமாலை அருகிப் போயுள்ளது. நவீன கருவிகளின் தாக்கம், பொழுதுபோக்குகள், களியாட்டங்கள், நாகரீக வளர்ச்சி போன்றவையே செபமாலை செபிப்பது குறைந்து போவதற்கு காரணமாகின்றது. இதனால் அழிவுகள் பல ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனவே இவற்றை தவிர்க்கவும், எம் நாடு பாதுகாப்பாக இருக்கவும் தினமும் செபமாலை செபித்து எம்மையும், எம் நாட்டையும் அன்னையின் பாதத்தில் ஒப்படைப்போம்.

மேலும் இம்மாதம் 27ம் திகதி தீபாவளியைக் கொண்டாடும் எமது சகோதரர்களுக்கு எமது தீபத் திருநாள் நல்வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றேன்.

**இறையாசீருடன் ஆசிரியர்**

இனவெறி போராட்டம் ஓய்ந்து, புதிதாக முளைத்திருக்கும் மதவெறி போராட்டம் அதிலே இயற்கை சுரண்டல், அரசியல் ஆதிக்கம் கட்சிப் பிரச்சினை, எல்லைச் பிரச்சினை போன்ற பல்வேறு காரணங்களால் எமது நாடு போர்க்களமாக மாறி வருகின்றது. போர்களும், வன்முறைகளும் எமக்குப் புதிதல்ல, கொஞ்ச காலம் அமைதியாக இருந்தோம், ஆனால் இன்று போர்களும், குண்டு தாக்குதல்களினாலும் அப்பாவி மக்களின் உயிரையும், இரத்தத்தையும் காவுக்கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு சில சுயநல வாதிகளாலும், அரசியல்வாதிகளாலும் ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களின் அழுகுரல்



# வன்முறையற்ற உலகம் படைத்திடுவோம்...

ஆளும் வர்க்கத்திற்கு கேட்கிறதோ இல்லையோ? ஆண்டவா உனக்கு கேட்க வேண்டுமே?

போர்காலத்தில் அடைக்கலம் நாடி உம் ஆலயமே தஞ்சம் என்று வந்தோமே இன்று அதுகூட எமக்கில்லையே! பச்சிளம் குழந்தைகளும், பால்குடி மறவா பிள்ளைகளும், கர்ப்பிணிப் பெண்களும், இளைஞர்களும், இளம் பெண்களும், முதியவர்களும் மாண்டு போயினரே உம் ஆலயத்தில் சதிகார வர்க்கத்தினாலே உமது புனிதமான இல்லத்திலே காவற்படைகளும், மோப்பம் பிடிக்கும் நாய்களும் வலம் வருவதைக் காணும் போது மனம் ஒடிந்து போகின்றதே. உமது புனிதமான சந்நிதானத்தில் காவலாளிகள் இறைவா?

அன்று எகிப்தில் உம் மக்கள் அனுபவித்த துன்பங்களைக் கண்டு, அவர்களது அழுகுரல், கேட்டு எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவித்த இறைவா இன்று எமது நாட்டையும், இந்த வன்முறையினால் பயந்து வாழ்ந்து கொண்டிருக்கும், நாட்டு மக்களையும் விடுவித்தருளும். உமது அமைதியைக் காணச் செய்தருளும். மனிதர்கள் உருவாக்கியுள்ள போர்களும், வன்முறைகளும் மறைந்து, எமது நாட்டில் அன்பும், சகோதரத்துவமும், நீதியும், நல்லாட்சியும் நிலவிட வேண்டும்.

இம்மாதம் முழுவதும் மறைபரப்பு மாதமாக நாம் கடைப்பிடிப்பதால் எமது மறைபரப்பு பணி என்ன என்பதை உணர்வோம். திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் மறைபரப்பாளர் தான். புனித பவுலடியார் கூறுவது போல "நற்செய்தியை அறிவிப்பவரின் மலரடிகள் எத்துணை அழகானவை" என்பதாகும். இந்த மறைபரப்பு பணிக்காக தன்னையே அடிமையாக்கி, வெறுமையில் வெறுமையாகிய எல்லோருக்கும் எல்லாமுமாக வேண்டும் என்பதே. அதாவது பிறரின் உணர்வுகளில், தேடல்களில், தேவைகளில், இரண்டறக் கலந்து செயற்படுவதே உண்மையான மறைபரப்பு பணியாகும். இதை எம் இல்லங்களிலும், பங்குகளிலும், வேலைத்தளங்கிலும் செயல்படுத்த முயல்வோம்.

> **உமது புனிதமான இல்லத்திலே காவற்படைகளும், மோப்பம் பிடிக்கும் நாய்களும் வலம் வருவதைக் காணும் போது மனம் ஒடிந்து போகின்றதே.**

மேலும் எமது இலங்கை நாட்டை காப்பாற்ற அன்னையிடமே எமது நாட்டை ஒப்படைப்போம். இயேசுவின் மறைபரப்பு பணியில் முதல் முதலாக ஈடுபட்டவர் அன்னை மரியா தான். அவரிடம் மன்றாடி தினமும் செபமாலை ஓதி அவரிடம் மன்றாடுவோம்.

அமைதியின் தெய்வமே, பயங்கரவாதமே இல்லாத அன்பு கொண்ட இறையரசாக எமது நாட்டை உருவாக்கி அதில் அமைதியின் தூதர்களாக எங்களை மாற்றும்

✠✠✠✠

# உண்மை உறைக்கும்



# செபமாலை உலகத்தின் தீமைகளை வெல்லும் சிறந்த ஆயுதம்



நம் திரு அவையின் பக்தி முயற்சிகளில் ஒன்று செபமாலை. செபமாலையின் தாய் என்ற அடிப்படையில் அன்னை மரியாவுக்கு வழங்கப்படுகின்ற பெயரே **தூய செபமாலை அன்னை** என்பதாகும். செபமாலை அன்னையின் விழாவை நம் திருஅவை அக்டோபர் 7ம் திகதி கொண்டாடி மகிழ்கின்றது.

கி.பி.13 ஆம் நூற்றாண்டில் தோமினிக் என்ற சுவாமிநாதருக்கு அன்னை மரியா காட்சி கொடுத்து செபமாலைப் பக்தியைப் பரப்பச் சொன்னார். படிப்படியாக இப்பக்தி வளர்ச்சி பெறவும் 1520, ஆம் ஆண்டு திருத்தந்தை பத்தாம் லியோ அக்டோபர் மாதத்தை செபமாலை மாதமாக அறிவித்தார். 1969 இல் திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் இந்த விழாவின் பெயரை **'செபமால அன்னை விழா'** என்று மாற்றினார். செபமாலை என்ற சொல் ஆங்கிலத்தில் ரோசரி என்பதாகும். **'ரோசரி'** என்றால் **'ரோசா மலரின் கிரீடம்'** என்றும், இலத்தின் மொழியில் **'ரோசாக்களின் மகுடம்'** என்றும் பொருளாகும். உலகின் எல்லா மொழிகளிலும் செபமாலையே சிகரம்.

**செபமாலையில் ஒவ்வொரு முறையும் அருள் நிறைந்த மரியே வாழ்க! என்று சொல்லும்போதும், ஒவ்வொரு மணியும் ஒரு ரோசாப்பூவாக தன்மேல் விழும்**

என்று 13 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அன்னையே புனித தோமினிக்கிற்குக் கூறியதாக வரலாறு தெரிவிக்கிறது. அப்படியென்றால் 53 மணிகள்கொண்ட செபமாலையை முடிக்கும்போது ஒரு ரோசாத் தோட்டத்தையே நாம் அன்னைக்குப் பரிசாக அளிக்கிறோம் அல்லவா?

**செபமாலை "ஏழைகளின் திருப்பாடல் என்றும், நற்செய்தியின் சுருக்கம் என்றும் அழைக்கப்படுகிறது". திருப்பலிக்குப் பின் அடுத்த அதிக மாபெரும் தெய்வீகம் கொண்டது செபமாலை**

என்றார் புனித சார்லஸ் பொரோமேயு.

**செபமாலை சொல்லும் ஒரு படையை எனக்குத் தாருங்கள். இந்த உலகை வென்று காட்டுகிறேன்**

என்றார் திருத்தந்தை 11ஆம் பத்திநாதர். 'செபமாலை நமக்கு ஆண்டவரிடமிருந்து வரங்களைப் பெற்றுத் தரும். நாம் செபிக்கும் செபங்களிலேயே அழகானதும், வளமையானதும் செபமாலையே.

**அது அன்னை மரியாவின் உள்ளத்தைத் தொடும் செபமாகும்**

என்கிறார் திருத்தந்தை பத்தாம் பத்திநாதர். மேலும்

**மரியாவின் கோணத்தில் இயேசுவை உற்றுப்பார்க்க செபமாலை உதவுகிறது. செபமாலையின் வழியாக கிறிஸ்துவின் பொறுமை, அமைதி, மகிழ்ச்சியை நாம் பெறுகிறோம்**

என்கிறார் திருத்தந்தை ஆறாம் சின்னப்பர்.

**செபமாலை ஓர் அற்புதமான செபம். எளிமையிலும், ஆழத்திலும் ஆவே மரியா பின்னணியில் நம் ஆன்மாவின் கண்கள் முன்னே இயேசு கிறிஸ்துவின் வரலாற்றுச் சிறப்பு நிகழ்வுகள் கடந்து செல்கின்றன**

என்கிறார் திருத்தந்தை இரண்டாம் அருள்சின்னப்பர்.

**ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேரம் செபமாலையின் மறையுண்மைகளைத் தியானித்தால் புனிதராவோம்**

என்று மிகுந்த பொறுமையிலும், அன்பினாலும் 70.000 கால்வின் மார்க்கத்தினரை மனந்திருப்பிய புனித பிரான்சிஸ் சலோசியார் என்கிறார்.

**ஒவ்வொரு நாளும் செபமாலை சொல்கிறவனிடம் பிசாசின் முயற்சிகள் பலனற்றுப் போகும். இதை மகிழ்ச்சியோடு என் குருதியினால் கையொப்பமிட்டு அறிக்கையிடத் தயார்**

என்றார் புனித லூயிதெ மாண்ட்போர்டு.

**செபமாலையின் அரசியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்**

திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர் லோரெட்டோ மன்றாட்டு மாலையில் செபித்தார்.

**அன்னை மரியா அருட்கொடைகளின் இருப்பிடம், அனைவரும் அன்னையிடம் செபிக்க வேண்டும். ஏனெனில் உலகம், மனித இனம் முழுவதும் மாமரியிடம் மன்றாட வேண்டும். நாம் எதிர் நோக்கும் எல்லா நன்மைகளும் அன்னையின் கரங்கள் வழியாகவே பெற்றுக்கொள்கிறோம்**

செல்லஸின் மடாதிபதி கூறுகிறார்.

**செபமாலை நம்மை இவ்வுலகத் தீமைகளிலிருந்து பாதுகாக்க அன்னை உருவாக்கிய கோட்டை; பிதாப்பிதாக்களுடைய நம்பக்கை, இறைவாக்கினர்களின் தியானம், அப்போஸ்தலர்களுடைய ஆதாரம், வேதசாட்சிகளின் நம்பிக்கையின் நங்கூரம், சகல மோட்சவாசிகளுக்கும் பிரியமான பொக்கிஷம், உத்தரிக்கிற ஆன்மாக்களை கரை சேர்க்கிற ஓடம், உலக மாந்தர் விண்ணகத்திற்கு ஏறிச்செல்ல உதவும் ஏணி, கடவுளையும், மனிதரையும் இணைக்கும் சங்கிலி, உலகத்தின் தீமைகளை வெல்லும் சிறந்த ஆயுதம் ....**

என்று புனித பியோ செபமாலையின் சிறப்புகளைச் சொல்லிக்கொண்டே போகலாம் என்றார்.

செபமாலையின் முக்கியத்துவத்தை அறிந்ததினால்தான் கிட்டத்தட்ட அனைத்துப் புனிதர்களுமே தங்கள் புனித வாழ்க்கையில் செபமாலையைத் தவறாமல் சொல்லி அவர்களது வாழ்க்கைச் சரித்திரங்களை வாசிக்கும்போது அறிய முடிகிறது.

மேலும் செபமாலை செபிப்பது ஒரு தியானப் பயிற்சியும் ஆகிறது. வாய் செபிப்பது, காது கேட்பது, தொடுதல் உணர்வோடு விரல்கள் செபமாலை மணிகளிடையே நகர்வதும், அதைக் கண்கள் பார்ப்பதும், சுவாசம் நுகர்வதாகவும் இருப்பதாலும், மனமும் சிந்தனையும் மறையுண்மைகளை அசைபோடும் என ஐம்புலன்களும் ஒரு நேர்கோட்டில் நிறுத்தப்படுவதால் இதுவும் ஒரு தியானப் பயிற்சியே ஆகும்.

செபமாலை மனங்கள் அணிந்து கொள்ள மரியாவால் அருளப்பட்ட மாலை, கடவுள் பாதி, மனிதர் பாதி கலந்த சேதி செபமாலை செபத்தின் நியதி. அருள் நிறைந்த மரியே வாழ்க' என்ற மங்கள வார்த்தைகளே ஐம்பது மூன்று மணிகளிலும் மாறாத கல்வெட்டுகள் ஆயின. பத்து மணிகளிடையே பத்திரமாக மறைந்திருப்பது **'தேவ இரகசியங்கள்'** என்ற இறைவனின் மீட்புச் சரித்திரம். மகிழ்ச்சியும், துக்கமும், மகிமையும், ஒளியும், இன்ப துன்பங்கள் நிறைந்த மனித வாழ்க்கையின் கோட்பாட்டைச் சொல்வது செபமாலை. இத்தகு அற்புத வல்லமை நிறைந்த செபமாலையை நாம் ஒவ்வொருவரும் அனுதினமும் செபித்து தேவ அன்னைக்கு பூமாலையாகச் சூட்டும் பொழுது, அவரது மகன் இயேசு அதிகமாக இன்புறுவது மட்டுமன்றி, இறையருளை கேட்பவர்க்குக் கேட்ட வரங்களை நிறைவாக அள்ளித் தருகிறார். இதை நாம் நம் அனுபவத்தில் உணர முடியும். உலக சமாதானம் மற்றும் நம் குடும்பங்களிலும் தனிப்பட்ட வாழ்விலும் அமைதி கிடைத்திட சக்திமிக்க அன்னையின் ஆயுதத்தைக் கையில் எடுப்போம். குடும்பத்தார் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒவ்வொரு நாளும் செபமாலை சொல்லும் வழக்கம் போற்றுதற்குரியது.

**மாலை நேரத்தில் செபமாலை செபிக்கும் குடும்பம் எத்துணை அழகானது...!**

என்கிறார் திருத்தந்தை ஆறாம் பெனடிக்ட். குடும்ப செபமாலை ஒரு தாயின் மன்றாட்டு ஆண்டவரது உள்ளத்தையே கரைக்கிறது எனலாம். இக்காலத்தில் உலகப்பற்று, அழிந்து போகும் பொருட்கள் மீது அதீத பேராவல், தகவல் தொடர்புச் சாதனங்களைத் தவறாகப் பயன்படுத்தி சிக்கிச் சீரழியும் நம் குடும்பத்து இளைய தலைமுறைகள், குடும்பக் கட்டுப்பாடு, மதச்சார்பற்ற சீர்திருத்தத் திருமணங்கள், விவாகரத்து, சிசுக்கொலை (கருக்கலைப்பு) போன்ற பல காரணங்களால் குடும்பத்தைக் குலைக்கவும்,அழிக்கவும் முயலும் அலகையின் தந்திரங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றக்கூடியவர் செபமாலை இராக்கினியும், செபமாலையுமே ஆகும்.


**தந்தை புனித பியோ கூறியபடி தீமைகளை வெல்ல சிறந்த ஆயுதம் செபமாலை என்பதை உணர்ந்து, நமது செபமாலைப் பக்தியை இந்த அக்டோபர் மாதத்தில் புதுப்பித்துக் கொள்வோம். தனியாகவோ, குடும்பத்திலோ, ஆலயத்திலோ, சபையிலோ, அன்பியங்களிலோ செபமாலை செபிப்போம். நமக்காக எல்லா நேரங்களிலும் இறைவனிடம் பரிந்துரைத்து அருள் வரங்களை அள்ளித் தருபவர் நம் அன்னை மரியா அவரின் பாதம் அமர்வோம். கூடிச் செபித்து கோடி நன்மைகளைப் பெற்றுக்கொள்வோம்.**

## செபமாலை மாதம் ........

**ஐப்பசி மாதம் செபமாலை அன்னையின் மாதம். இந்த மாதத்திலும், வைகாசி மாதத்திலும் கிறிஸ்தவ குடும்பங்களில் நேசிக்கப்பட்ட செபம் செபமாலை. செபமாலை செபித்து வாழும் குடும்பம் ஒற்றுமையாக வாழ்கிறது. இது விலை மதிக்க முடியாத சொத்து. இந்த சொத்தை நாம் இழந்து விழுந்து விடக் கூடாது!**

இன்றைய கால கட்டத்தில் குடும்பங்கள் ஒன்றாக இருந்து, மாலை வேளைகளில் செபமாலை செபித்து குறைந்து விட்டது. காரணம் சீரியல் பார்ப்பது அதைப்பற்றி கதைப்பது, விமர்சனம் செய்வது ஏன் இன்னும் அதிலேயே மூழ்கி விடுவது. இதனால் அக்குடும்பத்தில் பிரச்சினைகள் சண்டை சச்சரவுகள், குடும்பங்களை அழித்து விடுகின்றது. அன்பு இல்லாமல் போகின்றது எல்லாம் எம்மை நோக்கி தாக்குகிறது. மற்றும் நம் நாட்டின் சமாதானம் இன்று பயங்கரத்திற்கு உள்ளாகியிருக்கும் பிரச்சினைகளிலிருந்து எமது நாட்டை காப்பாற்ற செபமாலை செபிக்கும் பழக்கத்திற்கு மீண்டும் திரும்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

**ஆகவே இந்த மாதம் முழுவதும். ஒன்றிணைந்து செபமாலையை செபிப்போம். சமாதானத்தைப் பெறுவோம்.**



வெளிப்பாட்டின்படி, கடவுள் மானிடர் அனைவருக்கும் அப்பா (பெற்றோர்) என்பதாகும். கடவுள் நம் பெற்றோர் என்றால் நாம் அனைவரும் அவரது குழந்தைகள். இவ்வுண்மை மனிதர் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கேற்ப நம் அரசியல், பொருளாதார, சமூக, சமய, கல்வி மற்றும் நல்வாழ்வு வாழப்படுவதாகும். அத்தகைய மனித சமூகத்தில் வாழ்கின்ற மனிதர் இதயங்களிலும், இல்லங்களிலும், சமுதாயத்திலும் கடவுள் அப்பாவாக ஆட்சி செய்வார்.

ஆனால் நாம் வாழும் சூழலில் கடவுள் அப்பாவாகவும், அம்மாவாகவும், நாம் அவரது குழந்தைகளாகவும் இருக்கிறோமா? நமது நடுவில் ஆண் - பெண் சமத்துவம் இல்லாததாலும், நமது பொருளாதார வாழ்வில் ஏழைகள், நடுத்தர மக்கள் மற்றும் பணக்காரர்கள் என்ற பாரதூர ஏற்றத்தாழ்வுகளாலும், சமூகத்தில் ஒரு பக்கம் சாதியால் தங்களை உயர்த்திக் கொண்டவர்களும், மறுபக்கம் சாதியால் தாழ்த்தப்பட்டவர்களாக ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்டு, மனித மாண்பும், மனித உரிமைகளும் பறிக்கப்பட்டு எண்ணற்ற மனிதர் வாழ்வதாலும், கடவுள் இன்னும், இன்றும் நம் அப்பாவாக அம்மாவாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மனிதர் யாவரும் கடவுளின் குழந்தைகளாகிட தயாராக இல்லை. இதற்கு அடிப்படைக் காரணம், நம் பாவமும் பாவம் நிறைந்த நம் பண்பாடும்தான்.

குழந்தைகள் தங்கள் பெற்றோர் புனிதமடையத் தங்களுக்குரிய வகையில் உதவுகிறார்கள். நன்றி உள்ளத்தோடும் அன்புடனும் நம்பிக்கையுடனும் குழந்தைகள் தங்கள் பெற்றோருக்கு கைம்மாறு தனிமையிலும் பிள்ளைகளுக்கு ஏற்ற முறையில் துணைபுரிவார்கள்" (இன்றைய உலகில் திருச்சபை. எண் 48) என்ற அறிவுரையையும் குழந்தைகளுக்கு வழங்குகிறது.

அதன் பிறகு குடும்பத்தையும் தாண்டி எங்கெல்லாம் பொதுநிலையினர் ஒரு குறிப்பிட்ட இடம், சமூகம், நாடு, உலகம் எனும் பல்வேறு தளங்களிலும் அவர்கள் பிரசன்னமாகி பணி செய்வதால் அங்கெல்லாம் அவர்கள் மறைத்தூதுப் பணியாற்ற வேண்டும். அப்படிப்பட்ட பொதுநிலையினரின் மறைத்தூதுப் பணி பொருளாதார, அரசியல், சமூக, சமய, கல்வி மற்றும் நல்வாழ்வு என்ற மனித வாழ்வின் பல்வேறு சூழமைவுகளைப் பிரதிபலித்து சமூக மாற்றத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும். இதையே இரண்டாம் வத்திக்கான் சங்கம், "சமுதாய, பொருளாதாரச் செயல்களைத் தக்க முறையில் ஒழுங்குபடுத்தக் கிறிஸ்தவ விசுவாசிகள் பாடுபட வேண்டும்" (திருச்சபையின் மறைபரப்புப் பணி.

# பொதுநிலையினரின் மறைத்தூதுப் பணி

பொதுநிலையினர் என்றால் யார்? இச்சொல், அருட்பொழிவு பெற்ற பணியாளர்கள் மற்றும் திருச்சபையின் இசைவுபெற்ற துறவற நிலையினர் நீங்கலாக, ஏனைய எல்லா நம்புகிறவர்களையும் குறிக்கும் (வத். 2. திருச்சபை, எண் 31). அவர்களது மறைத்தூதுப் பணி என்றால் என்ன? திருமுழுக்கின் வழியாக இயேசு கிறிஸ்துவோடு ஒருடலாக்கப்பட்ட பொதுநிலையினரை, கிறிஸ்துவே உறுதிபூசுதல் மூலம் தூய ஆவியின் வல்லமையில் தனது இறையாட்சியை தொடர்ந்து பரப்பிட மற்றும் வளர்த்திட அனுப்புகிறார். அவரது அனுப்புதலை ஏற்று தாங்கள் வாழும் குடும்பம், சமூகம் மற்றும் உலகமெங்கும் தங்களது சொல் செயல் அனைத்திலும் கிறிஸ்துவுக்கும் அவரது நற்செய்திக்கும் சான்று பகர்ந்து அவரையும் அவரது நற்செய்தியையும் அறிவிப்பதாகும். இதைத்தான் திருச்சபையின் மீட்புப் பணியில் பங்கு பெறுவதே பொதுநிலையினரின் திருத்தூ-துப் பணியாகும்" (திருச்சபை, எண் 33. காண். திருச்சபையின் மறைபரப்புப் பணி எண் 11) எனப் புரிந்துகொள்கிறோம்.

## மறைத்தூதுப் பணிக்கான சூழல்

ஒட்டுமொத்த ஆசியக் கண்டத்திலும், இலங்கை, இந்தியாவிலும் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை மூன்று சதவிகிதத்திற்கு குறைவாகவே இருக்கின்றது. எனவே கிறிஸ்துவையும், அவரது இறையாட்சியின் நற்செய்தி-யையும் அறியாதவர்களே நிறைய இருக்கிறார்கள். இவர்களில் 80 சதவிகிதம் ஏழைகளாக இருக்கிறார்கள். இவர்கள் பல சமயங்களையும் பல்வேறு பண்பாடுகளையும் சார்ந்தும், பின்பற்றியும் வருகின்றார்கள். இதனால் நம் சூழலில் பொதுநிலையினரின் மறைத்தூதுப் பணிக்கு நிறைய வாய்ப்புகளும், பணிகளும் இருக்கின்றன என்பதை மறைத்தூதுப்பணி பண்டாட்டுமயமாக்கலில் வேரூன்றி, பல்சமயங்களோடு உரையாடி மற்றும் ஒத்துழைத்து, அதிக எண்ணிக்கையில் உள்ள ஏழையெளிய மக்களை மீட்பதாக விடுதலை பெற்றுத் தருவதாக அமைந்திடல் வேண்டும். ஏனெனில் ஏழைகளின் மீட்பில்தான் எல்லாருடைய மீட்பும் அமைந்துள்ளது. (மத் 25:31-46)

## மறைத்தூதுப் பணிக்கான சிறப்புத் தேர்வு

ஏழைகளுக்கான சிறப்புத் தேர்வு என்பது இறையாட்சியின் மையமாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவிடமிருந்து இறையாட்சியை பெறுவதில் ஏழைகளே அன்றும் இன்றும் முதலிடம் பெறுகிறார்கள் (மத் 5:3) யோர்தானில், தாம் திருமுழுக்குப் பெறுகின்ற நிகழ்வு வழியாக எப்போது சாதாரண மக்களோடும், ஏழைகளோடும், பாவிகளோடும், வரிதண்டுவோரோடும் இயேசு தம்மை முற்றிலுமாக ஐக்கியப்படுத்திக் கொள்கிறாரோ, அப்போது தந்தையாம் கடவுள் இயேசு யார் என்பதை வெளிப்படுத்துகிறார் (மத் 3:17). மேலும் இந்தச் சிறப்புத் தேர்வின் அடிப்படையில் அமைந்த அவரது பணிவாழ்வே அவரது இரண்டாம் திருமுழுக்காம் சிலுவைச் சாவை அவருக்குக் கொண்டு வந்தது. அப்போதும் தந்தையாம் கடவுள் இயேசு யார் என்பதை வெளிப்படுத்துகிறார் (மத் 27:54). இறைமகனாம் இயேசு கிறிஸ்து எடுத்த ஏழைகளுக்கான சிறப்புத் தேர்வே அவரைப் பின்பற்-றும் திருச்சபைக்கும் உரியது (திருச்ச-பையின் மறைபரப்பு பணி, எண் 12). இதையே திருச்சபையில் இருக்கும் எல்லாப் பொதுநிலையினரும் தங்களின் மறைத்தூதுப் பணியில் பின்பற்ற வேண்டும். "பசியோடும் அறியாமையோடும் பிணியோடும் போராடி, வாழ்க்கை நிலையை உயர்த்தவும், அமைதியை உலகில் நிலைநாட்ட முயலும், மக்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் கிறிஸ்த-வர்களும் பங்குகொள்ள வேண்டும்" (திருச்சபையின் மறைபரப்பு எண் 12).

## மறைத்தூதுப் பணிக்கான இலக்கு

இயேசு கிறிஸ்துவின் இப்பாவத்தை இப்போது திருச்சபை தனி மனித பாவம் என்றும், சமூகப் பாவம் என்றும், அமைப்புப் பாவம் என்றும், வரலாற்றுப் பாவமென்றும், மின்னணு ஊடகப் பாவம் என்றும் புரிந்து கொள்கிறது. இப்பாவங்களிலிருந்து நம்மை மீட்க வல்லவர் கடவுள் ஒருவரே. அவர் நம்மிடம் எதிர்பார்ப்பது மனமாற்றம். அதைத்தான் இயேசு தமது இறையாட்சிப் பணியின் தொடக்கத்தில் அறிவித்தார். "காலம் நிறைவேறி விட்டது, இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற் 1:15). இயேசுவைப் பின்பற்றி வாழும் பொதுநிலையினரும் இந்த நற்செய்தியையே நம்பி, அதனை தங்களின் மற்றும் பிறரின் மனம்மாற்றத்திற்காக அறிவித்து இறையாட்சியை தங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும், சமூகத்திலும் உலகிலும் உருவாக்குவது மறைத்தூதுப் பணியின் இலக்காகும்.

## மறைத்தூதுப் பணிக்கான இடங்கள்

பொதுநிலையினர் முதன்முதல் நற்செய்தியை அறிவிக்க வேண்டிய இடம் தங்கள் குடும்பமே. கணவர் மனைவிக்கும், மனைவி கணவருக்கும், பெற்றோர் பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் பெற்றோருக்கும் மறைத்தூது துப் பணியாற்றிட வேண்டும். இப்பணி மனம் மாற்றத்திற்காகவும், அதனால் பிறக்கும் இறையாட்சிக்காகவும் நற்செய்தி அறிவிக்கும் பணியாகும். அதற்கு உகந்த முதல் இடம் குடும்பமே. பெற்றோர்களுக்கான சங்க அறிவுரையும் இதுவே, "மணமக்கள் தாயாகவும் தந்தையாகவும் இருக்கும் மேன்மையையும் பணியையும் கொண்டிருப்பதால், முதல் முதல் அவர்களைச் சார்ந்த கல்வி கற்பிக்கும் கடமையை, சிறப்பாக மறைக்கல்வி புகட்டும் கடமையை, கருத்துடன் நிறைவேற்றுவார்களாக" (இன்றைய உலகின் திருச்சபை. எண் 48) அதே சங்கம் "குடும்பத்தின் உயிருள்ள உறுப்பினர்கள் என்ற முறையில்,

எண் 12) எனக் கூறுகிறது. மேலும், "இப்பணித்தளத்தில் கிறிஸ்தவ விசுவாசிகள் தனி, பொது நிறுவனங்கள், அரச அனைத்து நாட்டு இயக்கங்கள், பல்வேறு கிறிஸ்தவ கிறிஸ்தவரல்லாத சமூகங்கள் ஆகியவை மேற்கொள்ளும் முயற்சிகளோடு தாங்களும் முன்மதியோடு இணைந்து செயல்பட வேண்டும்" (திருச்சபையின் மறைபரப்புப் பணி. எண் 12) எனவும் எடுத்தியம்புகிறது. இவ்வாறு சமூக மாற்றத்திற்கான பொதுநிலையினரின் மறைத்தூதுப்பணி இறையாட்சிக்கு ஒத்தவண்ணம் அமைந்திட வேண்டும்.

அந்தச் சமூக மாற்றம் சமய வாழ்வில்: சாவிலிருந்து வாழ்விற்கும், சடங்கிலிருந்து உண்மைக்கும், பயத்திலிருந்து துணிச்சலுக்கும், சந்தேகத்திலிருந்து நம்பிக்கைக்கும், பாவத்திலிருந்து புனிதத்திற்கும் அழைத்துச் செல்லவேண்டும். அரசியல் வாழ்வில், அறியாமையிலிருந்து விழிப்புணர்விற்கும், அதிகாரத்திலிருந்து பணிக்கும், குடிமயக்கத்திலிருந்து தெளிவிற்கும், ஆதிக்கத்திலிருந்து அன்பிற்கும், வெறும் வார்த்தை-யிலிருந்து செயலுக்கும், ஆணவத்-திலிருந்து கீழ்ப்படிதலுக்கும் அழைத்துச் செல்ல வேண்டும்.

பொருளாதார வாழ்வில் : பசியிலிருந்து நிறைவிற்கும், ஏழ்மையிலிருந்து வளமைக்கும், பகட்டிலிருந்து எளிமைக்கும், சேர்த்து வைப்பதிலிருந்து பகிர்தலுக்கும், அநீதியிலிருந்து நீதிக்கும் அழைத்துச் செல்ல வேண்டும்.

சமுதாய வாழ்வில் : சாதியிலிருந்து சமத்துவத்திற்கும், பிரிவிலிருந்து ஒற்றுமைக்கும், சுயநலத்திலிருந்து பிறர்நலத்திற்கும், வெறுப்புகளிலிருந்து மன்னிப்பிற்கும், குறைவுகளிலிருந்து நிறைவிற்கும் அழைத்துச் செல்ல வேண்டும். கல்வி மற்றும் நலவாழ்வில் : அறியாமை எனும் இருளிலிருந்து அறிவெனும் ஒளிக்கும், நோயிலிருந்து நலவாழ்வுக்கும் அழைத்துச் செல்ல வேண்டும்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..



# மனிதகுலத்திற்கு 175 ஆண்டு காலமாக பணி புரிவதற்கென்று ஆசி பெற்ற திருச்சிலுவைக்கன்னியர் சபை [மென்சிங்கன்]

17.10.2019



### பின்னணி :

பத்தொன்பதாம் நூற்றாண்டில், சுவிட்ஸ்லாந்து நாடானது மென்சிங்கன் என்னும் மலைக்கிராமத்தில் 1844ம் வருடம் ஐப்பசித்திங்கள் பதினாறாம் நாள் திருச்சிலுவைக்கன்னியர் சபையைப் பெற்றெடுத்த நிகழ்வின் ஒப்பீட்டிற்கு சாலப் பொருந்தும். வெவ்வேறு நீரோடைகள் ஒன்றையொன்று கடக்கும் காலம் அது.

18ம் மற்றும் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட பேரழிவு மாற்றங்கள் சுவிட்ஸ்லாந்தில் பேரழிவு விளைவை உருவாக்கியது. சுவிட்ஸ்லாந்தின் சில பகுதிகளில் பிரெஞ்சு ஆக்கிரமிப்பின் மூலம் மாணவர் சங்கம், துப்பாக்கிச் சங்கம் போன்றன ஏற்படுத்தப்பட்டதுடன் படப்பிடிப்பு விழாக்களும் அவ்வப்போது நடைபெற்றன. தீவிரவாதிகள் மற்றும் பழமைவாதிகளுக்கு இடையிலும், புரட்டஸ்தாந்து மற்றும் கத்தோலிக்கர்களுக்கு இடையிலும் மோதல்கள், முரண்பாடுகள் காணப்பட்டன. ஜேர்மனியில் பிஸ்மார்க்கின் நடவடிக்கைகள் இத்தாலியில் திருத்தந்தையின் சொத்துக்களை பறிமுதல் செய்ய வழிவகுத்தன. இதனால் தீவிரவாதிகள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள ஆதரவாக அமைந்தது. இங்கிலாந்தின் முகத்தை மாற்றிக் கொண்டிருந்த தொழிற்துறைப் புரட்சி, நாட்டில் மோசமான விளைவை ஏற்படுத்தியது. 5 வயது குழந்தைகள் தொழிற்சாலைகளில் ஒரு நாளில் 5 மணி நேரம் வேலை செய்தனர்: 11 முதல் 20 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகள் பதினொன்றரை மணித்தியாலங்கள் இரவிலும், 13 மணித்தியாலங்கள் பகலிலும் வேலைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆறு வயதிற்கும் அதற்கு மேற்பட்டோர் கரங்களில் பணம் சுதந்திரமாக இருந்ததால் அவர்கள் தம் மூப்பர்களைப் போல் புகைப்பிடித்தல், சண்டையிடுதல், தார்மீக வீழ்ச்சி போன்ற செயல்கள் வெளிப்படையாக அடையாளம் காணப்பட்டன. அப்போது சுவிட்ஸ்லாந்து ஒரு வீணான நிலமாகக் கருதப்பட்டது.

### புறம் போக்கு நிலமாக கிடந்த இடம் துறவற சபை ஒன்றினையே பெற்றெடுத்த இடமாக மாறிய நிலை

ஒரு பக்கத்தில் முட்டாள்தனம், இருள்மயம், அவநம்பிக்கை, காலம் (யுகம்) போன்றவை இடத்தை புறம்போக்கு நிலமாக்கிக் கொண்டிருக்க மறுபுறத்தில் நம்பிக்கையின் காலம், ஞானத்தின் காலம், எதிர்நோக்கின் காலம், ஒளியின் காலம் என்பன அதே இடத்தினை முழுமையான ஆரோக்கியமான இளம் தலைமுறையினரை ஆன்மீக உருவாக்கத்தின் மூலம் சுதந்திர ஒழுக்க விழுமிய முன்னேற்றம் செய்யக்கூடிய முறையில், காலத்தின் தேவையை நிறைவு செய்யக்கூடிய வகையில் புதிதான ஒரு துறவற குழுமம் உருவாக்கம் பெறும் வழமான இடமாக மாறியது.

18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் திரு அவை மிகவும் சக்தி வாய்ந்த அதிகாரமுள்ளதொன்றாகக் காணப்பட்டது. சுவிஸ்சலாந்தில் மதத்திற்கும் அரசியலுக்குமிடையில் ஒரு சிக்கலான நிலை வளர்ச்சியடைந்து காணப்பட்டது. 19ம் நூற்றாண்டில் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த காலத்தில் கிறிஸ்தவ வாழ்க்கை முறையையும், மதிப்பீடுகளையும் வாழும் பாரம்பரிய வாழ்க்கை முறையினை விஞ்ஞானத்தின் வளர்ச்சி சவால் செய்தது. இவ்வாறான சூழலில் அன்னா மரியா ஹைம்காட்னர், அன்னாகிறமர் மற்றும் வுல்பெர்க்மாட்டர் ஆகியோர் தம்மை சூழ நடப்பதை அவதானித்து 19ம் நூற்றாண்டின் கல்விமானாக, சீர்திருத்தவாதியாக, பிரான்சிஸ்கன் சபை துறவியாக அறியப்பட்ட அருட்தந்தை தியோடோசியஸ் ∴ப்ளோரன்ரனி என்பவரை அணுகினர். தம்மை அணுகியவர்களின் தேவையையும், சமகால தேவையையும் உணர்ந்து காலத்தின் தேவைகளுக்கு பதிலளிப்பது மட்டுமல்லாது உலகின் எந்தவொரு சூழலுக்கும் பொருந்தி அமையக்கூடியதான ஒரு துறவற சபையை உருவாக்க வேண்டும் என கனவு கண்டு கொண்டிருந்தார். தம்மை அணுகிய மூன்று இளம் பெண்களையும் மூன்றாண்டுகள் தொழின்முறை மற்றும் துறவற பயிற்சிக்காக ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைத்தார். மேற்படி மூன்று நவசந்நியாச சகோதரிகளும் தமக்குள்ள தொழின்முறைக் கல்வியைக் கொண்டு றிபூவிலே (Riburville) சகோதரிகளின் சபையில் இணைந்து ஆசிரியப்பணியில் சந்தோசமாக திருப்திய-டைந்திருக்கலாம். ஆனால் அதை விடுத்து தமது தாய் நாட்டில் புதிதாக ஒரு துறவற சபையினை உருவாக்கும் கடினமான பாதையை தெரிவு செய்து கொண்டனர். ஏற்கெனவே பல மடங்களையும், துறவற இல்லங்களையும் அரசாங்கம் மூடியிருந்ததுடன் புதிய துறவு இல்லங்களுக்கான அனுமதியும் மறுக்கப்பட்டிருந்தது. இது ஒரு மாற்றத்தின் நேரமாகவும், புதியதொரு அழுத்தம் பற்றி வேகமாக சிந்திக்க வேண்டிய நேரமாகவும் காணப்பட்டது. பழையன கழிய புதியன அவ்விடத்தை நிரப்பாதிருந்த ஒரு நிலை. இப்படியான ஒரு இக்கட்டான சூழலில்தான் துறவற

**'உங்களுக்குரிய துறவு இல்லத்தை உலகிலே கண்டுபிடியுங்கள், உங்களுக்குரிய அமைதியான அறையினை (ஆலயம்) உங்கள் இதயங்களில் கண்டுபிடியுங்கள்'**



உருவாக்கம் பெற்று திரும்பிய மூவரும் ஓல்ட்றோவ் (Altdorf) என்னுமிடத்தில் 16.10.1844 அன்று பேர்ணாடா ஹைம்காட்னர், பெலிசியானா கிறேமர், கொர்னேலியா மாட்டர் எனும் பெயரில் தமது முதல் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினர். தகுதியாகவும், சமகால சூழ்நிலைக்கு முகம் கொடுக்கும் வகையிலும் இவர்களைத் தயார் செய்த அருட்தந்தை தியோடோசியஸ் அவர்கள் முதலாவது மறைப்பணியான ஆசிரியப் பணிக்காக மென்சிங்கனுக்கு அனுப்பியபோது "உங்களுக்குரிய துறவு இல்லத்தை உலகிலே கண்டுபிடியுங்கள், உங்களுக்குரிய அமைதியான அறையினை (ஆலயம்) உங்கள் இதயங்களில் கண்டுபிடியுங்கள்" என அறிவுறுத்தினார். இந்த சகோதரிகளிடமிருந்து புதிய கல்விமுறையினை பெற்றுக்கொண்ட இந்த இளம் பெண்கள் எதிர்காலத்தில் கூட்டாண்மை மாதிரியில் தங்கள் பாத்திரங்களுக்கான சமநிலை வகிபாகத்துக்கு தம்மை தயார்படுத்திக் கொண்டனர்.

### முரண்பாடுகள் குழப்பங்களுக்கிடையில் ஸ்தாபக நோக்கத்திற்கான பிரமாணிக்க தன்மை

"சோளத்தின் இதழ்கள்போல அன்பினால் தம்மோடு ஒன்றாக இணைத்துக்கொண்டார் வெறுமையாக்கி உங்களை சோதிக்கின்றார் உங்களது மேலுறைகளிலிருந்து வெளிவர தூண்டுகின்றார் வெண்மையாக்குவதற்கு உங்களை அரைக்கின்றார் நீங்கள் வளைந்து கொடுக்கும் வரை உங்களை பிசைகின்றார் அப்படியே உங்களை தமது தூய்மையாக்கும் நெருப்புக்கு அனுப்புவதன் மூலம் நீங்கள் கடவுளுடன் தூய திருவிழா அப்பமாக மாற்றப்படுகிறீர்கள்." (Kahlil Gibran)

1855ம் ஆண்டில் பத்து ஆண்டுகளுக்குள் சபையானது முப்பது ஆரம்ப அரச பாடசாலைகளில் ஈடுபட்டிருந்ததுடன் (அரசு ஏற்கனவே அவர்களது கற்பித்தல் திறமைகளையும், சிறந்த அறிவுடமையினையும் அங்கிகரீத்தது) நான்கு தனியார் உயர்நிலை பாடசாலைகளையும் ஒரு ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியையும் நிர்வகித்து வந்தது. மேற்படி சகோதரிகள் "மென்சிங்கன் திருச்சிலுவைக் கன்னியர்" என்று பெயர் பெற்றிருந்தனர்.

முறையாக பாடத்திட்டங்களை ஒழுங்கமைப்பு செய்பவரும், நேர்த்தியாக வழிகாட்டுபவருமான அருட்தந்தை தியோடோவின் நெறிப்படுத்தலால் இந்த அருட்சகோதரிகள் மேற்படி பாடசாலைகளை ஒரு முழுமையான கல்வி சேவையாக நிர்வகித்தனர். அரசு திருச்சபைக்கு எதிராகப் பாவித்த இளையோருக்கான கல்வி எனும் அதே ஆயுதத்தைப் பாவித்து மாற்றங்களை கொணர்வதாக உறுதிபூண்டு கொண்ட அவர் சமூகத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த முன்னெடுப்பான மாற்றங்களைக் கண்டு பூரித்துப்போயிருந்தார்.

சபை உருவாக்கம் பெற்று மூன்று ஆண்டுகளுக்குள் சபைக்கும், அவர் தலைமைத்துவத்திற்கு இடையிலும், சபைக்குள்ளும் முரண்பாடுகளும் குழப்பங்களும் ஏற்பட்டன. அருட்தந்தை தியோடோசியஸ் கன்ரன் சூர் (Canton Chur) என்ற இடத்துக்கு மாற்றப்பட்டதுடன் இனிமேல் புதிதாக உருவாக்கம் பெற்ற சபையுடன் எந்த தொடர்பும் இருக்கக்கூடாது என சபை மேலாளர் அருட்தந்தை தியோவுக்குக் கூறியது புதிதாக உருவாக்கம் பெற்ற சபைக்கு ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் கொடுத்திருந்தது. தமது அனைத்து முயற்சிகளையும் அருட்சகோதரிகளே பொறுப்பேற்க வேண்டி ஏற்பட்டது. கன்ரன் சூரில் சமூகத் தேவைகளான ஆபத்தில் உள்ள இளையோர், அநாதைகள், வேலைசெய்யும் சிறார்கள் மட்டில் அக்கறை காட்டுதல், நோய்வாய்ப்பட்டவர்களை பராமரித்தல் போன்ற பணிகள் மூலம் சமூகத்தின் தேவைகளுக்கு பதிலளித்த போது அன்னை பேர்ணாடா தனது கல்விப்பணி புரிந்த சகோதரிகளை தாராள உள்ளத்துடன் ஒத்துழைப்பிற்காக அனுப்பிவைத்தார் இந்த சகோதரிகள் "இரக்கத்தின் சகோதரிகள்" என அவரால் பெயர் சூட்டப்பட்டனர்.

கால ஓட்டத்தில் உருவாக்குனருக்கு மேலதிக சகோதரிகள் மேற்படி சேவைக்காக தேவைப்பட்டனர். இந்நிலையில் அன்னை பேர்ணாடா சங்கடமான ஒரு நிலைக்கு தள்ளப்பட்டார். காரணம் ஒரு பக்கத்தில் அருட்தந்தை தியோடோசியஸ் அவர்கள் நிறுவுனரும் உதவியாளருமாக காணப்பட்டதுடன் மறுபக்கத்தில் காசநோயால் பீடிக்கப்பட்டு இளம் வயதிலேயே இறந்து போயினர். பாடசாலைத் தலைமையாளர் எனும் வகையில் பாடசாலையில் இருந்து எடுக்கப்பட்ட சகோதரிகளுக்கு பதிலாக நன்கு பயிற்றப்பட்ட சகோதரிகள் வழங்கப்படாமை காரணமாக பாடசாலை நிர்வாகத்துடன் முரண்பட வேண்டிய இக்கட்டான சூழல் ஏற்பட்டது.

முழுமையான கல்வி செயற்பாடுகளினூடாக இளம் பெண்களின் உருவாக்கத்தை முதன்மையான நோக்கமாகக் கொண்டு தம்மை அர்ப்பணித்து இரண்டு சபைகளையும் இணைத்து மென்சிங்கனிலிருந்த தாய் வீட்டை கன்ரன் சூர்க்கு மாற்றம் செய்வதற்கு நிறுவுனர் எடுத்த முயற்சிகள் திருச்சபையின் தலைமைத்துவத்தால் தடுத்து நிறுத்தப்பட்டது. அன்னை இளையோரின் கல்விக்கான தனது அர்ப்பணிப்பையும் தனது அருட்சகோதரிகள் மட்டில் கரிசனைபெடுக்கவும் இறைவனுக்கு தான் கொடுத்த வாக்குறுதிகளை வாழவுமென இப்படியானதொரு நிலையினை எடுத்துக் கொண்டார். தனக்கென துறவி என்னும் நிலையினையும், கல்வியாளர், சபைத்தலைவி எனும் நிலையினை திரு அவையே தனக்கு தந்ததென்பதை அன்னை பேர்ணாடா தனது உள்ளத்தில் நன்கே உணர்ந்திருந்தார். இருந்தும் அவரது மனச்சாட்சியை நசுக்கியது திரு அவையே. மிகக்குறுகிய காலத்தில் துறவு சபையினை துறவு மடமாக (Monastic Order) மாற்றுவதற்கு மடாதிபதி போர்க்கர் அவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இன்னுமொரு குருவானவர் சகோதரிகளின் வாழ்க்கை முறையிலும் விதித்தொகுப்புக்களிலும் மாற்றம் கொணர வேண்டுமென விரும்பினார். அன்னை ஞானத்தின்



**'ஆண் வர்க்கத்தின் தனிச்சிறப்பினை நிறுவ நினைப்போர், இயேசு ஆண் பெண் என்றல்ல அனைவருக்கும் மீட்பர் என்பதை உணரத் தவறி விட்டனர்.'**

சூழலில் வாழ்ந்தவர். "உனது மனத்தெளிவினை பயன்படுத்துவதே அறிவுடமை" என்கின்ற கான்ட் இன் விருது வாக்கு அன்னை பேர்ணாடாவின் செயற்பாட்டுக்கு சரியாக பிணைந்து கொண்டது.

அன்னை பேர்ணாடா தன் மனதை சரியாக வளர்த்திருந்தார். முதிர்ச்சியின்மையிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு தன்னுடைய வழியை தொடர்ந்தார். விதிமுறை தொகுப்பு குறித்துக்காட்டும் சபையின் முதன்மையான நோக்கமான இளம் நங்கையரின் உடல் உள சக்தியை உறுதிப்படுத்துவதுடன் அவர்களுக்கான முறைமைப்படுத்தப்பட்ட படிப்பறிவின் வழி நல்லதொரு சந்ததியை உருவாக்குவதில் அன்னை ஆர்வம் காட்டினார். ஆண் ஆதிக்க வர்க்கம் தமது ஆணாதிக்கத்தினை சகோதரிகள் மேல் விமர்சனமாக பிரயோகித்தது. தானியம் போல கதிரடிக்கப்பட்டார். சல்லடை போடப்பட்டார், அரைக்கப்பட்டார், பிசையப்பட்டார், தூய நெருப்புக்குள் அனுப்பப்பட்டதன் வழியாக இறைவனின் உணவாகும் அப்பமாக தன்னையே மாற்றிக் கொண்டார். பேர்ணாட் ஹரியிங் கூறுவது போல "ஆண் வர்க்கத்தின் தனிச்சிறப்பினை நிறுவ நினைப்போர், இயேசு ஆண் பெண் என்றல்ல அனைவருக்கும் மீட்பர் என்பதை உணரத் தவறி விட்டனர்." புயலும் சூறாவளியும், வேதனையும் அவமானமும் நிறைந்த வாழ்வாக இருப்பினும் சகோதரிகள் சிலுவையிலறையுண்டு உயிர்த்த ஆண்டவரின் ஆவியால் பாதுகாக்கப்பட்டு அவற்றுக்கு முகம் கொடுத்தனர். ஆன்மீகம் என்பது சாதாரணமான மனித திட்டங்களில் அல்ல மாறாக இறைவனில் வளர்த்துக் கொள்கின்ற நம்பிக்கையினால் தூண்டப்பெறும் வாழ்க்கை அனுபவத்திலேயே மலருகின்றது....

தொடர்ச்சி அடுத்த இதழில்...

2010 - 2020 ஞான ஒளி GNANA OLI



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

### பொதுக்காலத்தின் 29வது ஞாயிறு (20.10.2019)

**பேதுரு**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 29வது வாரத்தின் தொடக்க நாளில் இறைமக்களாக ஒன்றிணைந்து வந்திருக்கும் நமக்கு நாம் எப்படி மனம் தளராமல் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற செய்தியை இன்றைய வார்த்தை வழிபாடு தருகின்றது. நிராதரவான ஒரு விதவையின் வெற்றியை நற்செய்தியில் பார்க்கின்றோம். கேளுங்கள் கொடுக்கப்படும்" "அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்", "முயற்சி திருவினையாக்கும்" போன்ற முன்னோரின் மொழிகளையும் நாம் கேட்டிருக்கின்றோம். இன்றைய முதல் வாசகத்தில் மோசேயின் வெற்றியின் இரகசியம் தரப்பட்டுள்ளது. யோசுவாவிடம் விளங்கிய ஆற்றலும் மோசேயிடம் இருந்த செபத்தின் மீதான புரிதலும் நம்பிக்கையும் எம்மிடம் இருந்தால் நாம் வாழ்க்கையில் முன்னேறலாம். இறைவார்த்தையில் ஊன்றி அதை வாழ்வது எமது செபத்தை வல்லமையுள்ளதாக மாற்றும் எமக்கு உதவி ஆண்டவரிடமிருந்து வருகின்றது என்ற உண்மையை ஏற்று செபத்தில் நிலைத்து வாழ பலியில் இணைந்து இறைவனிடம் மன்றாடுவோமாக.

**முதல் வாசகம் : வி.ப 17:8-13**

மோசே தன் கையை உயர்த்தியிருக்கும் போதெல்லாம் இஸ்ரயேலர் வெற்றியடைந்தனர்.

**பதிலுரைப் பாடல் :**

விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவரே எனக்கு உதவி

**இரண்டாம் வாசகம் : 2 திமொ 3:14-4:2**

கடவுளின் மனிதர் தேர்ச்சி பெற்று நற்செயல் அனைத்தையும் செய்யத் தகுதி பெறுகிறார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா, அல்லேலூயா! கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது. உள்ளத்தில் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கின்றது அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 18:1-8**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

திருஅவைக்காக மன்றாடுவோம். அன்பு தெய்வமே இறைவா! உமது திருவுளப்படி உமது திரு மைந்தன் இயேசுவால் உருவாக்கப்பட்ட திருஅவையின் தலைவரான திருத்தந்தை ஆயர்கள், அருட்பணியாளர் துறவியர் அனைவரும் மக்களின் நம்பிக்கைக்குரியவர்களாக செபத்தில் நிலையாய் இருந்து பணியாற்றிடத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டிற்காகவும் உலகிற்காகவும் மன்றாடுவோம். நம்பிக்கையின் நாயகனே நல்லிறைவா! நிரந்தரமற்ற அரசியல், சீரற்ற பொருளாதாரம் சுயநலப் போக்குகள் போன்றவற்றால் அல்லல்படும் மக்களும், நாடுகளும் நிம்மதி வாழ்வை அடையவும், ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் அவநம்பிக்கைகள் மறையவும் அன்பும் அமைதியும் எங்கும் நிலவவும் வரமருள வேண்டுமென்று...

மக்கள் அனைவரின் நல்வாழ்வுக்காக மன்றாடுவோம். இரக்கத்தின் ஊற்றே அன்பிறைவா! பலவிதமான மனப்போராட்டங்களோடு வாழும் மக்கள் வாழ்வில் மாற்றம் ஏற்படவும், நமது உண்மையான செபங்கள் இறைவனை அடையும் என்பதால் நாம் மற்றவர்களுக்காக செபிக்கவும், அனைவரின் நல் வாழ்விற்காக உழைக்கவும் வேண்டிய ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று...

### பொதுக்காலத்தின் 30வது ஞாயிறு (27.10.2019)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 30வது ஞாயிறு தின வழிபாட்டில் பங்குகொள்ள வந்திருக்கும் இறைமக்களாகிய நமக்கு இன்றைய வார்த்தை வழிபாடானது பிறரை மட்டம் தட்டி தன்னை உயர்வாக மதிப்பவன் பலவீனன் தன்னை தாழ்த்தி பிறரை உயர்வாக மதிப்பவன் பலசாலி என்பதை உணர்த்துகின்றது. ஏனெனில் தன்னைத் தாழ்த்துபவன் சார்பாக இறைவன் என்றும் செயலாற்றுகின்றார். நன்கு விளைந்த நெற்கதிர்கள் தலைகுனிந்து நிற்கும் ஒன்றுக்கும் உதவாத பதரின் கதிர்களோ தன்னை உயர்த்தி அசைந்தாடிக் கொண்டிருக்கும் நாம் பயிரிட்டால் பயிரிட்ட தானியங்களை விட களைகளானது சற்று உயர்ந்தே நிற்கும். ஆனால் அதனுடைய உயர்வு நிரந்தரமானது அல்ல, காரணம் தோட்டக்காரன் வந்து உயர்ந்து நிற்கும் களைகளைப் பிடுங்கி எறிந்து விடுவான். தாழ்ச்சியைக் கற்பிக்க இயேசு கூறிய பரிசேயனைப் போல் இறுமாப்புக் கொள்ளாமல் மனம்மாறி செபித்த பாவியின் மனநிலையைப் பின்பற்றி தாழ்ச்சி கொண்டவர்களாக வாழ தொடரும் பலியில் மன்றாடுவோமாக.

**முதல் வாசகம் : சீரா 35:12-14, 16-18**

தங்களைத் தாழ்த்துவோரின் வேண்டுதல் முகில்களை ஊடுருவிச் செல்லும்

**பதிலுரைப் பாடல் :**

இந்த ஏழை கூவியழைத்தான் ஆண்டவர் அவனுக்கு செவிசாய்த்தார்.

**இரண்டாம் வாசகம் : 2 திமொ 4:6-8, 16-18**

எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றிவாகையே

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா, அல்லேலூயா! கடவுள் கிறிஸ்துவின் உலகினரைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். அந்த ஒப்புரவுச் செய்தியை அவரே எங்களிடம் ஒப்படைத்தார் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 18:9-14**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

மரணம் மட்டும் கீழ்ப்படிந்த இயேசுவின் தாழ்ச்சியை கைக்கொண்டு மக்கள் அனைவருக்கும் வழிகாட்டும் திருஅவைக்கும், திருத்தந்தைக்கும், அவருடன் இணைந்து நல்லாட்சி செய்யும் ஆயர்கள், அருட்பணியாளர், துறவியர் அனைவருக்கும் உமது நிறையாசீரைப் பொழிந்து வழிநடத்தியருள வேண்டுமென்று...

தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற இறைவார்த்தையை மனதில் கொண்டு தலைவர்களும் மக்களும் செயல்படவும் தமது பணிகளை அணிசெய்து பாகுபாடின்றிப் பணியாற்றவும் விளம்பர நாட்டமின்றி தாழ்ச்சி கொண்டவர்களாக உமக்கு ஏற்புடையவர்களாக வாழவும் வரமருள வேண்டுமென்று...

பெருமைக்கும் சிறுமைக்கும் காரணமாய் அமைவது நமது செயல்பாடுகளே என்பதை நாம் உணரவும் இயேசு இறைமகனாக இருந்தும் பெருமை பாராட்டாமல் வாழ்ந்தது போல நாமும் வாழவும், நம்மை விட மற்றவர்கள் சிறந்தவர்கள், உயர்ந்தவர்கள் என்ற மனநிலையை வளர்த்து கடவுளுக்கு ஏற்புடையவர்களாக வாழவும் வரமருள வேண்டுமென்று...

## ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் - 13

# மனிதனின் அவல நிலை பற்றிய சிந்தனை

- உருவப் பொருட்களின் பற்றினால் கீழ்மைக்கு இழுக்கப் படாதிருக்க, அவர்களின் ஆசைகள் யாவும் உயரே அழியாதவற்றிற்கும், காணாதவற்றிற்கும் எடுத்துச் செல்லப்பட்டன.
- சகோதரனே, ஆன்ம அலுவல்களில் வளர்ச்சி அடையத் தேவையான மன உறுதியை இழந்து-விடாதே. இன்னும் போதிய காலமும் நேரமும் இருக்கிறது.
- நீ ஏன் உனது செயலுறுதியை நாளைக்கென மாற்றி வைக்கிறாய்? எழுந்து உடனே தொடங்கு. இதுதான் செயல்பட ஏற்ற நேரம், இதுதான் போர் தொடுக்கத் தகுந்த காலம், இதுதான் திருந்துவதற்குச் சரியான வேளை, என்று சொல்லிக்கொள்.
- நீ துன்பமும் துயரமும் படுகிறாயே, அதுதான் பலன் பெற வேண்டிய நேரம்.
- நீ ஓய்வு அடையுமுன் நெருப்பு, நீர் இவற்றின் வழி கடந்து சென்றாக வேண்டும்.
- உனக்கு நீ கொடுமை செய்யாவிட்டால் தீமையை மேற்கொள்ளமாட்டாய்.
- அழியும் இந்த உடலைத் தாங்கிச் செல்லும் நாள்வரை நாம் பாவமின்றி இருக்க முடியாது. களைப்பும் வேதனையுமின்றி வாழ முடியாது.
- பாவத்தால் நமது மாசின்மையை அழிக்காமலும், உண்மையான விண்ணக இன்பத்தை இழக்காமலும் நாம் இருந்திருந்தால், எல்லா அவல நிலையும் மாறி, நமக்கு நிரம்ப அமைதி கிடைத்திருக்கும்.
- எனவே, இந்தக் கேடு மாறுவதுவரை சாவு வாழ்வால் ஆட்கொள்ளப்படுவதுவரை, நாம் பொறுத்திருத்தல் வேண்டும். இறைவனது இரக்கத்-திற்காகக் காத்திருத்தல் வேண்டும்.
- ஓ! எப்போதும் திமைபால் சாய்ந்திருக்கும் மனித வலுவின்மையை என்னென்பது?
- இன்று உன்னுடைய பாவங்களுக்கு நீ மன்னிப்புப் பெறுகிறாய், ஆனால், நாளை அவற்றையே திரும்பச் செய்கிறாய்.
- இப்போது கருத்தாய் நடப்பதாக உறுதிகொள்கிறாய். ஆனால் ஒரு மணி நேரத்திற்குள் எந்தச் செயலு-றுதியும் கொள்ளாதவன் போல் ஒழுகுகிறாய்?
- எனவே, நாம் இத்தனை வலுவற்றவர்களும், நிலையற்றவர்களுமாய் இருப்பதால், நியாயமாக நம்மைத்தாமே தாழ்த்தவும், ஒருபோதும் நம்மைப் பற்றிச் சிறப்பாக எண்ணாதிருக்கவும் வேண்டியிருக்கிறது.
- மிகுந்த உழைப்பினாலும், அருளின் துணையாலும் வருந்திப் பெற்றவற்றை நம் கருத்தின்மையால் விரைவில் இழந்துவிடக்கூடும்.
- இவ்வளவு விரைவில் நாம் சோர்ந்துவிட்டால் முடிவு வரும்போது நமக்கு என்ன ஆகும்?
- நமது ஒழுக்கத்தில் உண்மை, புனிதத்தன்மையின் அடையாளம்கூட இதுவரை தோன்றாதிருக்க, இப்போதே அமைதியும் பாதுகாப்பும் பெற்றவர்-போன்று ஓய்வுகொள்ள விரும்புவது நமக்குக் கேடாகவே முடியும்.
- ஒருவேளை பின்னால் நாம் திருந்திவிடுவோம் அல்லது மிகுந்த ஆன்ம வளர்ச்சி பெறுவோம் என்ற நம்பிக்கை நமக்கு இருந்தால், பயின்றுவரும் நல்ல துறவிகளைப்போல் உயர் நல்லொழுக்கத்தில் இன்னும் ஒருமுறை பயிற்சி பெறுவது மிகுந்த பயன்தரும்.

தொடரும்

# “நீங்கள் திருமுழுக்குப் பெற்று அனுப்பப்படுகிறீர்கள்”

## 2019 ஆம் ஆண்டின் உலக மறைபரப்பு தினத்தை முன்னிட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தி

### திருமுழுக்கு பெற்று அனுப்பப்படுகின்றீர்கள் – கிறிஸ்துவின் திருச்சபை பற்றி உலகிற்கு மறைபரப்பு

**அன்புள்ள சகோதர சகோதரிகளே!,**

ஐப்பசி 2019ம் ஆண்டில் திருத்தந்தை 15ம் ஆசிர்வாதப்பர் அவர்களின் அப்போஸ்தலிக்க மடலின் மக்சிமம் இருட் (Maximum illud) இன் நூற்றாண்டு விழாவை நினைவுகூறும் போது முழுதிருச்சபையையும் அதன் மறைபரப்பில் விழிப்புணர்வையும், அர்ப்பணிப்பையும் புதுப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன் என்று கூறியுள்ளார். அப்போஸ்தலர்களின் தொலை நோக்கு மற்றும் தீர்க்கதரிசன பார்வை திருச்சபையின் மறைபரப்பில் உறுதிப்பாட்டை புதுப்பிப்பதன் முக்கியத்துவத்தை மீண்டும் எனக்கு உணர்த்தியது. மேலும் நற்செய்தி அறிவிக்கும் பணிக்கு புதிய தூண்டுதலை கொடுத்து, இறந்து மீண்டும் உயிர்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் மீட்பை உலகிற்கு கொண்டு வருதலாகும்.

தற்போதைய மறைபரப்பு மாதத்தின் தலைப்பு “திருமுழுக்குப்பெற்று அனுப்பப்படுகின்றீர்கள்” அதாவது கிறிஸ்துவின் திருச்சபை பற்றி உலகில் மறைபரப்பு. இம்மாதத்தை முதலில் கொண்டாடுவது, இயேசு கிறிஸ்துவில் நம்முடைய விசுவாசத்தின் மறைபணி பரிமாணத்தை மீண்டும் கண்டுபிடிப்பதற்காகும். இவ்விசுவாசம் எமக்கு திருமுழுக்கின் மூலம் அளிக்கப்பட்டுள்ளது. கடவுளுடன் எமக்கு உள்ள உறவு வெறுமனே தனிப்பட்ட ஒன்றல்ல, எப்போதும் திருச்சபையுடன் தொடர்பான ஒன்றாகும். நாம் அனைவரும் தந்தை, மகன், தூய ஆவியானவருடன் நமக்கிருக்கும் ஒற்றுமையின் மூலம் நம்முடைய சகோதர, சகோதரிகளுடன் இணைந்து புதிய வாழ்வில் பிறப்பிக்கப்படுகின்றோம்.

இந்த தெய்வீக வாழ்வானது விற்பனைக்கு கொடுக்கப்படும் ஒரு தயாரிப்பும் அல்ல. மதமாற்றத்தை எம்மில் ஏற்படுத்துவதுமில்லை, ஆனால் தொடர்பு கொண்டு மறையுரைப்பதற்கேயாகும், இதற்கான புதையல் எமக்கு கொடுக்கப்பட்டுள்ளது, இதுவே மறைபரப்பு பணியின் அர்த்தமாகும். யாரையும் ஒதுக்கி வைக்காமல் “நாம் இலவசமாக பெற்றுக் கொண்ட இந்த பரிசை நாம் இலவசமாக கொடுக்க வேண்டும்” (மத்:10:8), “எல்லா மனிதரும் மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விருப்பினார்” (1தீமொத்தேயு:2:4)

திருச்சபையானது உலக பணியில் செயற்படுகின்றது. கடவுளின் சொந்தக் கண்களாலும், இதயத்துடனும் உலகைப்பார்க்கின்ற போது, இயேசு கிறிஸ்துவின் மீது உள்ள விசுவாசமானது எல்லாவற்றையும் சரியான கண்ணோட்டத்தில் பார்க்க எமக்கு உதவுகின்றது. நாம் பகிர்ந்து கொள்ளும் தெய்வீக வாழ்க்கையின் நித்திய எல்லைக்குள் செல்ல நம்பிக்கை வழி வகுக்கின்றது. சடங்குகளிலும், சகோதரத்துவ அன்பிலும் நாம் முன்னறிவித்திருக்கும் தர்மம், உலகின் கடை எல்லை வரைக்கும் செல்ல நம்மை தூண்டுகின்றது. (மத் 28:19, அப்போஸ்தலர் 1:8, உரே 10:18) தொலை தூர எல்லைகளுக்கு முன்னோக்கி செல்லும் திருச்சபைக்கு நிலையான மற்றும் தொடர்ச்சியான மறைபரப்பு மாற்றம் தேவைப்படுகின்றது. இந்த வரம் பெற்ற திறந்த தன்மை, கருணையுடன் வெளிவருவது, உண்மையில் சாத்தியமானதும் யதார்த்தமானதும் என்பதற்கு பல புனிதர்களும், ஆண்களும், பெண்களும், சாட்சி கூறுகின்றனர். ஏனெனில் இது அன்பினால் இயக்கப்படும் தியாகம் மற்றும் நன்றியுணர்வுமாகும். (2கொரி:5:14-21) கடவுளைப்பற்றி அறிவிக்கும் மனிதன் கடவுளின் மனிதனாக இருக்க வேண்டும்.

இந்த மறைபரப்பு ஆணை தனிப்பட்ட முறையில் நம்மை தொடுகின்றது. நான் ஒரு பணியாள், எப்போதும் நீங்களும் ஒரு பணியாள், திருமுழுக்குப்பெற்ற



ஒவ்வொரு ஆணும், பெண்ணும் ஒரு பணியாள். அன்பில் உள்ளவர்கள் ஒரு போதும் அசையாமல் இருப்பார்கள், அவர்கள் ஈர்க்கப்படுகின்றார்கள், மற்றவர்களையும் ஈர்க்கின்றார்கள். அவர்கள் தங்களை மற்றவர்களுக்கு கொடுத்து, அர்ப்பணிப்பின் உறவை உருவாக்குகின்றார்கள். கடவுளின் அன்பை பொறுத்த வரை யாரும் பயனற்றவர்களோ, அற்பமானவர்களோ அல்ல. ஒவ்வொருவரும் உலகின் பணியாளர்கள். நாம் ஒவ்வொருவரும் கடவுளின் அன்பின் பிரதிபலன். பெற்றோர்கள் பொய், வெறுப்பு மற்றும் துரோகத்தால் தங்களின் அன்பிற்கு பிரமாணிக்கமற்றவர்களாக இருந்தாலும் இறைவன் கொடையாக கொடுத்த வாழ்வை திரும்பி எடுப்பதில்லை. நிரந்தரமாக அவர் தனது பிள்ளைகள் நித்திய வாழ்க்கையில் பங்கு கொள்ள விதித்துள்ளார். (எபே: 1:3-6)

திருமுழுக்கின் மூலம் இந்த வாழ்க்கை எமக்கு வழங்கப்பட்டுள்ளது. இது பாவத்தையும் மரணத்தையும் வென்ற இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளும் பரிசை எமக்கு வழங்குகின்றது. திருமுழுக்கு கடவுளின் சொந்த உருவத்திலும், ஒற்றுமையிலும், நமக்கு மறு பிறப்பை அளிக்கின்றது. அத்தோடு கிறஸ்துவின் உடலாகிய திருச்சபையின் உறுப்பினர்களாக ஆக்குகிறது. எனவே உண்மையாகவே மீட்பிற்கு ஞானஸ்தானம் அவசியமான ஒன்றாகும், ஏனென்றால் நாம் அனைவரும் எம் தந்தையின் மக்கள் என்பதை உறுதி செய்கின்றது, நாம் ஒரு போதும் அனாதைகளோ, அடிமைகளோ, அன்னியர்களோ அல்ல. கிறிஸ்த வாழ்வின் உண்மை நற்கருணை எனும் அருட்சாதனத்தின் நிறைவில் காணப்படுகின்றது. அழைப்பில் நிலைத்துள்ள ஒவ்வொரு ஆணும், பெண்ணும் மாற்றத்தினையும், மீட்பினையும் தேடுகின்றனர். திருமுழுக்கு இறைவனின் கொடையான வாக்குறுதியை நிறைவேற்றி எல்லோரையும் அவரின் பிள்ளையாக ஒன்றிணைக்கின்றது. நாம் எமது ஆதிப்பெற்றோரின் பிள்ளைகள், ஆனால் திருமுழுக்கினால் நாம் ஆதி தந்தையினதும், உண்மை தாயின் தன்மையினையும் பெறுகின்றோம். யாரும் கடவுளுக்கும் திருச்சபைக்கும் தந்தையாகிட முடியாது. (புனித சிப்ரியன்) எமது பணியானது கடவுளின் தந்தையின்மை மற்றும் திருச்சபையின் தாய்மை என்பவற்றில் வேரூன்றியுள்ளது. உயிர்ப்பு நாள் அன்று உயிர்த்த இயேசுவினால் கொடுக்கப்பட்ட கட்டளை திருமுழுக்கினால் கிடைக்கப்பட்டது, தந்தை என்னை அனுப்பினது போல் நானும் உங்களை அனுப்புகின்றேன், தூய ஆவியை பெற்றுக்கொள்ளுங்கள் எவருடைய பாவங்களை மன்னிக்கின்றீர்களோ அவை மன்னிக்கப்படும். (யோவான்:20:19-23) இப்பணியானது கிறிஸ்தவர்களாகிய நம்முடைய அடையாளத்தின் ஒரு பகுதியாகும். ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தந்தையின் வளர்ப்பு பிள்ளையாக தங்களின் அழைத்தலை உணரவும் தங்களின் தனிப்பட்ட கௌரவத்தை அறிந்து மனித வாழ்வின் உண்மையான பெறுமதியை பாராட்டுவது எமது பொறுப்பாகும். இன்றைய பரவலான...

தொடர்ச்சி 12ம் பக்கம்..

## 2018 ஆம் ஆண்டு உலக மறைபரப்பு ஞாயிறு தின நிதி சேகரிப்பு

| மறைமாவட்டம் | தொகை |
|---|---|
| அனுராதபுரம் | 100,200.00 |
| பதுளை | 114,197.00 |
| சிலாபம் | 764,350.00 |
| கொழும்பு | 2,875,550.00 |
| காலி | 151,000.00 |
| யாழ்ப்பாணம் | 981,643.00 |
| கண்டி | 244,762.00 |
| குருநாகல் | 530,840.00 |
| மன்னார் | 6,654,612.00 |
| இரத்தினபுரி | 217,812.00 |
| மட்டக்களப்பு | 87,140.00 |
| திருகோணமலை | 210,440.00 |
| தொகை | 12,932,546.00 |

பாப்பிறை மறைபரப்புச் சபைகள்,
19, பல்கம் பிளேஸ்,
கொழும்பு - 08.

Tel/Fax : 0112-685673

email : pmssrilanka@gmail.com /

website : www.pontificalmission.lk



ஞான ஒளி GNANA OLI




## எமது குடுப்பத்தின் ஆன்மீக அன்பளிப்பு

திருப்பலி ....... திவ்விய நற்கருணை....... பிறரன்புச் செயல்....... செபமாலை....... தியாகச் செயல்கள்...... பெயர்....... முகவரி....... நன்கொடை ரூபா...... காசோலை எனில் அதனை "Pontifical Mission Societies" எனக் குறிப்பிடவும். விசுவாச மறைபரப்புச் சபையின் அங்கத்தவராவதற்கு நீர் செய்ய வேண்டியது மூவாயிரம் ஆண்டில் இயேசுநாதரின் நற்செய்தியைக் கேட்டு மக்கள் வாழ்வைப் பெற்றுக்கொள்ள, அச்செய்தியை பரப்ப மன்றாடுவதும், தியாகங்கள் செய்வதும், பண உதவி செய்வதுமேயாகும்.

மறைபரப்பு ஞாயிறன்று நீங்கள் உவந்தளிக்கும் உதவி உலகில் அதிக தேவை யாருக்கோ அவர்களுக்கே பகிர்ந்தளிக்கப்படுகின்றது. அயரா முயற்சியே அவசியம் தேவைப்படுகின்றது. மறைபரப்பு ஞாயிறன்று மட்டுமன்றி, வருடம் முழுவதும் உங்களால் இயலுமான பண உதவியை செய்யுங்கள்

# உலக மறைபரப்பு ஞாயிறு 20.10.2019

## ...கு மூலம் அழைப்பு பெறுகிறோம்.



...ல் பெற்ற திருமுழுக்கோடு, ...யாக கிறிஸ்து உரிமையாக்கிக் ... விருப்பத்தை நிறைவேற்ற ... தூய ஆவியானவரிடமிருந்து ...வனத்துக்கு எடுத்துச்சென்ற ... அன்பில் நிரம்புவதற்கும், ...கொள்வதற்கும் உதவியவர் ...வியே.

...ணீரினால் திருமுழுக்குக் ...னும் சில நாட்களில் பரிசுத்த ...றுவீர்கள் என்று (தி.தூ.ப 1:5) ...ன்னோடு இருந்த சீடருக்கும் ...ாகக் கூறுகிறார். அத்துடன் ... ஆயத்தப்படுத்துகிறார். தூய ...அனுபவித்து, அந்த வல்ல...ருங்கள் என நம்மை பரிசுத்த ...பற்ற நம் ஒவ்வொருவருக்கும் ...

... விட்டுச் சென்ற தூதுரைப் ...வதற்காகவே பலர் மத்தியில், ...சாதனத்தின் மூலம், தூய ...லம் புதுவாழ்வு, புதுமலர்ச்சி ... சிலரை, தம் விண்ணரசு ...தாடர அழைப்பு விடுக்கிறார். ...கப்படுகிறவர்களே கடவுளின் ... 8:14) கூறப்பட்டிருக்கிறது. ... தந்தையே என அழைக்கும் ... நாம் ஆவியானவரால் ...வர்கள் தான். எனது, எனக்கு ...டு நாம், எமது, எமக்கு என்ற ...ளிக்கின்றனர். (தி.தூ.ப 2:42-...

...லித்த பேதுருவானவர் தூ...ப்பட்ட பின் அவரால் இன்றி ...இல்லை என ஆணித்தரமாக ...றார். அவரும் திரு அவையின் ... அழைக்கப்பட்டார். காரணம் ... திருமுழுக்கு.

...ன்னோக்கி பார்த்தோமானால் ...வின் போது இயேசுவின் ... நிறைந்தவர்களாய் உலகின் ...றைதூதுப்பணியை அறிவித்து ... உலகிற்குத் தர முடியுமா...நம் எலிசபெத்தும் சிறப்பான ... தம் அழைப்பினை ஏற்று ...ப்பட்டு விசுவாச வாழ்வு ...கின் மூலம் இறைவனுக்கு ...பார்த்து தந்தை என்னை ...ளையும் அனுப்புகின்றேன் என அழைப்பு விடுக்கிறார் (யோ 20:19-23) இறையரசின் மகனாக மகளாக திருமுழுக்குப் பெற்ற நாம் இறையரசிற்காக எமக்கு கொடுத்த பணியைச் சரிவரச் செய்கின்றோமா? கணத்திற்கு கணம் தூய ஆவியாருக்கு விழிப்-புற்று எமக்களித்த பொறுப்புக்களால் ஆண்டவரை மகிமைப்படுத்தி இறை சாட்சியாளர்களாக வாழ முன்வருவோமா? தூய ஆவியாரின் விசேட திருமுழுக்கைப் பெற்றுக் கொண்ட நாம் சீடத்துவ மக்களாக தேர்ந்து கொள்ளப்பட்ட நாம் அவருடைய சகல வரங்களையும் இறையரசின் வளர்ச்சிக்குப் பாவிக்கும் தூதனாக, பணியாளனாக வாழ முன்வருவோமா? முன் வருவோம்.

**அருட்தந்தை சேவியர் ரஜீவன்,**
**பாப்பிறை மறைபரப்பு சபையின் மறைமாவட்ட இயக்குனர் – திருகோணமலை.**

ஏனெனில் அவர் தம் கனிகளை இலவசமாகத் தந்துள்ளார். விண்ணரசுப் பணிக்காக மீண்டும் மீண்டும் எம்மை அழைக்கின்றார். திருமுழுக்கு பெற்று அதன் மூலம் தூய ஆவியாரோடு அர்ப்பணமான எம்மை பார்த்து "தந்தை என்னை அனுப்பியது போல் உங்களையும் அனுப்புகின்றேன்." என யோவா 20:19-23ல் அழைப்பு விடுக்கின்றார்.

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருமே இறைவார்த்தையை அறிவிக்கும் தூதுவர்கள். கடவுள் தான் குறித்து வைத்தோரை அழைத்திருக்கின்றார். (உரோ 8:30) ஆண்டவரின் அழைப்பு ஒவ்வொருவருடைய திறமையைப் பார்த்தோ அந்தஸ்தைப் பார்த்தோ வருவதில்லை மாறாக கடவுளின் இரக்கத்திற்கேற்ப அவரின் திட்டத்திற்கேற்ப கொடையாக வழங்கப்படுகிறது. அதனைத்தான் எசாயா இறைவாக்கினர் கருப்பையில் இருக்கும் போதே ஆண்டவர் என்னை அழைத்தார் எசா49:1 எனக் கூறுகிறார்.

நாம் மறுபடியும் பிறப்போம். தண்ணீரால் நாம் பெற்ற திருமுழுக்கு உடல் சார்ந்தது. தூய ஆவியால் பிறப்பது என்பது உள்ளம் சார்ந்தது. ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று இயேசு நிக்கோதேமைப் பார்த்துக் கூறுகிறார். இப்படிப்பட்ட மறுபிறப்பினை ஏற்று இறைவனின் அழைத்தலை உணர்வோம்.

## ...வாச மறைபரப்புச் சபை

**...டில் லியோன்ஸ் என்னும் நகரில் செல்வி. மாரி பொலின் ஜெரிக்கோ ...பட்டது. இச்சபையின் நோக்கம் மறைபரப்பு சேவையில் ஈடுபட்டுள்ள ...த்தினாலும் ஒறுத்தலினாலும் ஒத்துழைப்பை வழங்கி மறைபரப்பு ...லா நாடுகளிலும் வளர்க்க வேண்டும் என்பதாகும்.**



## "நீங்கள் திருமுழுக்குப் பெற்று அனுப்பப்படுகிறீர்கள்"

### பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனரின் செய்தி

**அருட்தந்தை பசில் ரொகான்**
**பாப்பிறை மறைபரப்பு சபைகளின்,**
**தேசிய இயக்குனர்,**



இயேசு கிறிஸ்துவில் உள்ள நம்பிக்கையை பாதுகாப்பதற்கும், உண்மையை புரிந்து கொண்டு அதை எடுத்துரைப்பதற்குரிய நேரம் வந்து விட்டது என்பதை வலியுறுத்த வேண்டும். இந்த மீட்பின் செயலானது "கடவுள் உலகை மிகவும் அன்பு செய்தார் இதனால் அவர் தன்னுடைய ஒரே மகனையும் கொடுத்தார்" (யோவன் 3:16) எனும் நற்செய்தி வார்த்தை அனைத்து மனித குலத்திற்கும் வெளிப்படுத்துவது, திருமுழுக்கின் மூலம் நற்செய்தியையும், இறைவனின் அன்பையும் பெறுவது மிகவும் ஒரு பாக்கியமாகும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2019 ஐப்பசி மறைபரப்பு மாதம் பற்றி கூறிய கருத்திற்கமைய உங்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

1. திருச்சபையில் உயிரோட்டமுள்ள இயேசுவை தனிப்பட்ட முறையில் சந்தித்தல் (திவ்விய நற்கருணையிலும், இறைவார்த்தையிலும், தனிப்பட்ட மற்றும் பொது செபத்திலும் சந்திக்கலாம்).
2. திருச்சபைக்கு சாட்சிகளாக இருக்கும் அப்போஸ்தலிக்க புனிதர்களும், தியாகிகளும் முழு உலகிலும் பரப்பப்பட்டு விசுவாசத்தை எடுத்துரைக்கின்றனர்
3. மறைபரப்பின் வளர்ச்சிக்கு - பரிசுத்த வேதாகமத்தைப் பற்றியும், தெய்வீக முறைகளையும் பயன்படுத்தவும்.
4. மறைபரப்பு பணியில் ஈடுபடவும்.

"நீங்கள் சென்று அனைவருக்கும் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" இது திருமுழுக்கின் மூலம் எம் அனைவருக்கும் கொடுக்கப்பட்ட ஒரு அழைப்பாகும். கிளையானது கொடியுடன் இணைந்து பலனைக் கொடுப்பது போல நாமும் பரிசுத்த ஆவியின் கொடைகளினால் நிரப்பப்பட்டு திருச்சபையின் நற்செய்திப்பணியில் இணைக்கப்படுகின்றோம். இது பொது நிலையினர்களின் அமைப்பில் குறிப்பிட்டுள்ள மூன்று கருத்துக்களை அடிப்படையாக கொண்டுள்ளது. அதாவது இறைவார்த்தையை உயிரூட்டம் பெறச்செய்வதும், இறைவார்த்தைக்கு சாட்சியாகவும், உயிருள்ள ஆண்டவர் இயேசுவை எடுத்துரைப்பதுமாகும். தற்போது எமது நாட்டில் நிலவும் பல சிக்கலான சூழ்நிலைகளுக்கு மத்தியில் கத்தோலிக்க வாழ்வை உயிருள்ள இயேசுவின் அதிகாரத்தின் வழியில் கொண்டு அமைக்க வேண்டும். 2ம் வத்திக்கான் சங்கம் பொது நிலையினர் இயல் 4ல் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி பொது நிலையினர் எப்போதும் ஆண்டவர் இயேசுவின் வாழ்விற்கும் உயிர்த்தெழுதலுக்கும் சாட்சியாக நிற்கவேண்டும், அத்தோடு சர்வவல்லமை உள்ள இறைவனின் அடையாளமாகவும் இருக்க வேண்டும். எனவே இந்த வார்த்தைகளால் ஒரு உண்மையான நற்செய்திக்குரிய வாழ்க்கையை வாழ்வதற்கு நாங்கள் அழைக்கப்படுகின்றோம்.

பரிசுத்த ஆவியானவர் புறா வடிவில் இயேசுவின் மீது இறங்கிய போது "இவரே என் அன்பார்ந்த மகன்" எனும் குரல் கேட்டது, நாம் இயேசுவில் உயிர்த்தெழ அவருடன் அடக்கம் செய்யப்பட வேண்டும். இயேசுவோடு உயர்த்தப்பட நாம் அவருடன் மூழ்கடிக்கப்பட வேண்டும். இயேசுவை மகிமைப்படுத்த அவருடன் எழுப்பப்பட வேண்டும். (நாசரேனின் புனித கிரகோி). இந்த சிறப்புப் பணியில் ஈடுபடுவதற்கு நித்திய ஆண்டவரும் சர்வவல்லமையுள்ள இறைவனின் மாட்சிமையில் பங்காளிகளாவோம்.

உண்மையாகவே, "இயேசு கிறிஸ்துவுடனான சந்திப்பில் எமக்கு பரிசாக கொடுக்கப்பட்ட நித்திய வார்த்தைகளை எம்முடன் வைத்துக்கொள்ள எம்மால் முடியாது. தெய்வீக ஆசீர்வாதங்களால் நமக்கு வழங்கப்பட்டதை மற்றவர்களுக்கும் கொடுப்பது எமது கடமையாகும். வாழ்வு கொடுக்கும் வார்த்தை அனைவருக்கும் உரியது. இது ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் உரியது. திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் Verbum Domini 2010 இல் கூறியுள்ளதாவது இறைவார்த்தையினால் நாங்கள் அனைவரும் நற்செய்தி பணியில் ஈடுபட வழிநடத்தப்படுகின்றோம். இயேசுவிற்கு என்ன நடந்தது, அதை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்கின்றோம் என்றால் நீரினால் திருமுழுக்கு பெற்ற பின் வானிலிருந்து தூய ஆவியானவர் இறங்கி சர்வவல்லமையுள்ள ஆண்டவரின் குரலால் நாம் இறைவனின் பிள்ளைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றோம் என கூறினார். (புனித கிளரி)

திருமுழுக்கின் தெய்வீக அழைப்பின் மூலம் புனிதத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்க சிறந்த முறையில் அபிஷேகம் செய்து அர்ப்பணிக்கப்பட்டுள்ளோம். திருமுழுக்கின் பின் திருத்துவத்தை எமது வாழ்வின் பங்காளிகளாக்கி இந்த உலகத்திலிருந்தும், நம்முடைய இறப்பிற்கு பின் நித்திய ஒளியிலிருந்தும் தந்தை, மகன், தூய ஆவியின் பெயரிலும் நம்முடைய விசுவாசத்தில் தெளிவாக இருக்க அழைக்கப்படுகின்றோம். (திருத்தந்தை 6ம் சின்னப்பர்) எனவே தேர்ந்து எடுக்கப்பட்ட வாழ்வில் விழிப்பாய் இருப்போம்.


திருமுழுக்கானது கத்தோலிக்க தன்மையில் உயர்ந்த ஒரு மலர் கொத்தாக காணப்படுகின்றது. திருமுழுக்கை பெறுவதை விட கத்தோலிக்க தன்மையான வாழ்வில் வேறு எதுவும் இல்லை. கத்தோலிக்க திருச்சபையில் 2ம் வத்திக்கானில் இதைப்பற்றி விளக்கப்பட்டுள்ளது. இன்றைய உலகமயமாக்கப்பட்ட சமூகத்தில் நம் அன்றாட வாழ்க்கையில் ஒரு மறைசாட்சியாக இருப்பது முக்கியமான ஒரு சான்றாகும். கத்தோலிக்கர்கள் அன்றாட வாழ்க்கை அனுபவத்தினால் திருமுழுக்கின் மூலம் இறைவனின் இராட்சியத்தைப்பற்றி அறிவிப்பதில் பங்காளிகளாக இருப்பது என்பது அவர்கள் உண்மையாகவே தங்களின்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி
GNANA OLI




# மறைக் கல்வி அறிவோம்



## உலக படைப்பு

**01. இறைவன் அனைத்தையும் படைத்தார் என்று கூறும்போது நாம் கருதுவது என்ன?**

B இறைவன் அனைத்தையும் ஒன்றுமிலாமையிலிருந்து உருவாக்கினார் என்பதே பொருள் ஆகும். இச்செயலே படைப்பாகும்.

**02. இறைவன் அனைத்தையும் படைத்ததின் நோக்கம் யாது?**

B இறைவன் அனைத்தையும் படைத்தது தமது மாட்சிமையையும் அவர் நம் மீது கொண்டுள்ள அன்பையும் வெளிப்படுத்தவே.

**03. துன்பம், கஷ்டம், தீமை உலகில் உருவாவது எப்படி?**

B இவை அனைத்தும் பாவத்தனாலேயே உருவாகிறது.....

**04. நாம் துன்புற இறைவன் இடமளித்துள்ளது ஏன்?**

B நாம் பாவத்திலிருந்து விடுதலை பெறவும், விண்ணகப் பேரின்பத்தினை அடையும் பொருட்டும்,கடவுள் இவ்வாறு நாம் துன்புற அனுமதிக்கின்றார்.

**05. இறைவனின் படைப்புக்களில் மிகச் சிறந்தவை யாவை?**

B இறைத்தூதர்களும் மனிதர்களும்.

**06. இறை தூதர்கள் என்போர் யார்?**

B இறைத்தூதர்கள் என்போர்கள் மெய்யுடல் அற்றவர்களான ஞானமும் தூய்மையும் உள்ள ஆவிகளானவர்கள்.

**07. இறைத் தூதர்கள் தாம் படைக்கப்பட்ட உன்னத நிலையிலேயே துலங்குகின்றார்கள்?**


B இல்லை, அவர்களின் சிலர் தம் அகங்காரத்தால், இறைவனுக்குக் கீழ்ப்படிய மறுத்தார்கள். அதனால் அவர்கள் தாழ்த்தப்பட்டார்கள்.



S.செனோலா – தரம் 4 Apple International School



P. ஷைனி – தரம் 6,
கொழும்பு நல்லாயன் மகளிர் மகா வித்தியாலயம்



ஜோன் றிஷன் – தரம் 5, பங்கு – இராஜகிரிய.

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
கொழும்பு 08.

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

## விவிலியப் பகுதி



### நற்செய்தி : புனித மாற்கு அதிகாரங்கள் 07–08

117 உன் தந்தையையும் தாயையும் மதித்து நட” என்றும் தந்தையையோ தாயையோ சபிப்போர் கொல்லப்பட வேண்டும்” என உரைத்தவர் யார்?

118. கொர்பான் என்றால் என்ன?

119. தீய எண்ணங்கள் எவை?

120. இயேசு புறப்பட்டு எந்த பகுதிக்குள் சென்றார்?

121. தீய ஆவி பிடித்திருந்த பெண் எந்த இனத்தை சேர்ந்தவள்?

122. பேய் உன் மகளை விட்டு நீங்கிற்று எனக் கூறியவர் யார்?

123. இயேசு சீர்தோன் வழியாக எங்கு சென்றார்?

124. எப்பத்தா என்பதன் பொருள்?

125. பெரும் திரளான மக்கள் எத்தனை நாட்களாக இயேசுவிடம் இருந்தார்கள்?

126. பாலை நிலத்தில் போதுமான உணவு இவர்களுக்கு அளிப்பது எப்படி என்று இயேசுவிடம் கேட்டவர்கள் யார்?

15

**கீழே தரப்பட்டுள்ள உவமையை தெளிவாக வாசித்து பூர்த்தி செய்து இம்மாதம் 25ம் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு அல்லது ஈ–மெயிலுக்கு அனுப்புங்கள்.**
பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களை எழுதும் முதல் 5 மாணவர்களின் விபரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

# காணாமல் போன ஆடு பற்றிய உவமை


புனித மத்தேயு
4:35-41



01

நீங்கள் மனந்திரும்பிச் சிறுபிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் .......
.............................................
.............................................
.............................................
.............................................
.............................................
.............................................
.இந்தச் சிறு பிள்ளையைப்போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர்.
.............................................
.............................................
.............................................
.............................................
.............................................
......ஏற்றுக் கொள்கிறார்.

02



ஒருவரிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று வழிதவறி அலைந்தால், ...............
.............................................
.............................................
.............................................விட்டு....

03

வழிதவறி ........
..........................
..........................
..........................
..........................
..........................
அல்லவா?



04

அவர் அதைக் கண்டுபிடித்தால் ....................................
.............................................
.............................................
.............................................
மகிழ்ச்சியடைவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்

05

. அவ்வாறே இச்சிறியோருள் ...
.............................................
.............................................
.............................................
.............................................
....................................திருவுளம்.



## மாணவர் ஒளி



## உன்னோடு ஒரு நிமிடம்

# தன்னை அன்பு செய்தலும் தன்னலமும்



தன்னை நேசித்தலுக்கும் தன்னலத்தோடு வாழ்வதற்கும் வேறுபாடுகள் பல உண்டு தன்னை உரிய மதிப்பு மாண்பு கரிசனை அன்பு போன்றவற்றை நீ உனக்கு வழங்குதல்.

தன்னை நேசித்தல் என்பது தன்னலம் அன்று. தன்னலம் என்பது சுயத்தை மட்டும் பெரியதாக்குதல் தன் சுயத்தை மட்டுமே பெரிதாக்கும் தன்னலம் நோய்வாய்ப்பட்ட மனநிலை.

இது தன்னைச் சுற்றி மட்டுமே வாழ்வது இது அடுத்தவருடைய தேவைகளைப் புரிந்து கொள்ளாமல் தன்னை பற்றி மட்டுமே சிந்தித்துச் செயல்படும் மனநிலை.

தன்னலத்தோடு வாழ்வது என்பது நான் நல்லவன் - நீ கெட்டவன், நான் தான் முக்கியம் - நீ தேவையில்லை. நான் செய்வது சரி - நீ செய்வது தவறு நான் கூறுகின்றேன் - நீ கேள் எனக்குத் தெரியும் - உனக்குத் தெரியாது என்ற ஒரு குறுகிய மனப்பான்மை.

எனவே, தன்னை நேசித்தலுக்கும் தன்னலத்தோடு வாழ்வதற்கும் வேறுபாடுகள் உள்ளதைப் புரிந்துகொள். தன்னை நேசிப்பது புனிதம் தன்னலத்தோடு வாழ்வது பாவம். தன்னை நேசித்தலில்தான் எல்லாவகை அன்பும் அடங்கியுள்ளது. இறையன்பும் பிறரன்பும் தன்னை நேசிப்பதிலிருந்து உதயமாகின்றன.

ஒருபோதும் தன்னை வெறுத்தல் தன்னை மறுத்தல் தன்னை நிராகரித்தல் ஆரோக்கியமானவை அல்ல. அறநெறிகளின்படி எப்படி ஒருவரை வெறுப்பது பாவமோ அதுபோல தன்னையே வெறுப்பதும் பாவமாகும். இப்படித் தன்னையே வெறுப்பது உளவியல் சார்ந்த ஆரோக்கியமற்ற நிலைமட்டுமன்று ஆன்மீகம் சார்ந்த குற்றமுமாகும்.

தன்னை வெறுப்பது தான் ஒன்றுமில்லாதவன் என்று கருதுவது தன்னைக் கண்டு கொள்ளாமலிருப்பது புண்ணியமன்று அது பாவம். நீ தன்னை நேசிப்பதன் வழியாய் இறைவனோடு ஓர் ஆழ்ந்த அன்புறவை ஏற்படுத்துகின்றாய் நீ உன்னை அன்பு செய்வது என்னுடைய கொடைகளை நீ பெற்றுக் கொள்ள திறந்த மனதை உனக்குள் தருகின்றது.

நீ உன்னை நேசிக்கும்போது என் அழகை உன்னிலே பார்க்கின்றாய். என்னுடைய அழகை இயற்கையில் பார்ப்பதற்குமுன் உன்னிலே அந்த அழகை நீ பார்க்க வேண்டும்.

காலைக் கதிரவனின் உதயம் சூரியன் மறையும் அழகு மரங்கள், பூக்கள், மலைகள், குன்றுகள், ஆறுகள், பெருங்கடல்கள், பறவைகள், விலங்குகள், மீன்கள், செடிகள், மலர்கள் இப்படி இயற்கையில் என் பேரெழிலைப் பார்க்கும் முன் உன்னிலே என் அழகைக் கண்டு பரவசமடைய வேண்டும்

நீ உன்னை நேசிக்கும்பொழுது நீ பிறரோடும் ஓர் ஆழ்ந்த அன்புறவை ஏற்படுத்துகின்றாய். நீ உன்னை நேசிக்காத போது நீ பிறரை நேசிக்க இயலாதவனாய் மாறுகின்றாய்.

நீ உன்னையே நேசிக்காத போது அடுத்தவரை நீ நேசிக்க முடியாது. அடுத்தவரை அன்பு செய்வதற்கான மனநிலை நீ உன்னை அன்பு செய்யும் மனநிலையிலிருந்து புறப்படுகின்றது.

உன்னுடைய அகத்தில் அன்பு இல்லையென்றால் நீ பிறருக்கு அன்பை வழங்க முடியாது.

நான் உன்னிடம் எதிர்பார்ப்பதெல்லாம் நீ பிறரை உன்னைவிட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ அன்பு செய்ய வேண்டும் என்பதல்ல மாறாக நீ உன்னை அன்பு செய்வது போல் பிறரையும் அன்பு செய்து வாழும் போதுதான் நீ மனிதனாய் வாழ்கின்றாய் நீ புனிதனாய் வாழ்கின்றாய் நீ என் பிள்ளையாக வாழ்கின்றாய்.

## க. பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான முன்னோடி வினாத்தாள் - 2019

**எல்லா வினாக்களுக்கு விடை எழுதுங்கள்**

1. ஐந்நூல்களின் பெயர்களை எழுதுங்கள்?
2. ஐந்நூல் வேறு எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
3. படைப்புப் பற்றிய முதல் கதையில் மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான்? (தொ.நூ 1:26-27)
4. திருவிவிலியத்தில் கிரேக்கமொழி பெயர்ப்பு ஏன் செப்துவாஜித் என அழைக்கப்படுகின்றது?
5. கத்தோலிக்கரின் பழைய ஏற்பாட்டு நூல்கள் எங்கிருந்து பெறப்பட்டன.
6. இணைத்திருமறை நூல்களின் பெயர்களை தருக.
7. நபி என்பதன் பொருள் என்ன?
8. பெரிய இறைவாக்கினர் பெயர்கள் 2 குறிப்பிடுக?
9. எதை அடிப்படையாகக் கொண்டு பெரிய சிறிய இறைவாக்கினர் என வகைப்படுத்தினர்?
10. பபிலோனிய அடிமைத்தனத்திலிருந்த இஸ்ராயேல் மக்களுக்கு எசேக்கியேல் இறைவாக்கினர் கொடுத்த நம்பிக்கை என்ன?
11. இஸ்ராயேலில் இறைவாக்கினர் என்று அழைக்க-ப்பட்டோர் யார்?
12. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களிடம் காணப்பட்ட பண்புகள் எவை?
13. ஐந்நூலில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்களைக் குறிப்பிடுக?
14. இறைவாக்கினர்களின் பணிகள் 3 குறிப்பிடுக?
15. சிறிய இறைவாக்கினர்கள் பெயர்கள் 5 குறிப்பிடுக?
16. மத்தேயு நற்செய்தி எந்த விடயத்துடன் ஆரம்பமாகின்றது?
17. இயேசுவால் அழைக்கப்பட்ட முதல் சீடராக விளங்கும் நற்செய்தியாளர் யார்? அவரது சகோதரர் யார்?
18. புனித லூக்கா நற்செய்தியின் வேறு பெயர்கள்?
19. புனித யோவான் நற்செய்தியின் அடையாளம் என்ன?
20. தூய யோவானின் பெற்றோர்?
21. குருமரபில் மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது?
22. மனிதனில் காணப்படும் இறைசாயலின் பண்புகள் மூன்றும் எவை?
23. மனிதன் ஏனைய படைப்புக்களைவிட மேலானவன் எவ்வாறு?
24. உலகைப் படைத்த இறைவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தமை எதை எடுத்துக் காட்டுகின்றது?
25. தோரா என்பதன் பொருள் என்ன?
26. கடவுளால் விலக்கப்பட்ட கனியை உண்டால் என்ன நடக்கும் எனப் பாம்பு பெண்ணிடம் கூறியது?
27. பாவத்தில் விழுந்த பெண்ணுக்கு (ஏவாள்) மனிதனுக்கு (ஆதாம்) காயீனுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளை எழுதுக?
28. நாம் நேரிய வழியில் நடக்க எமக்கு அறிவுரை கிடைக்கும் வழிகள் 4 எழுதுக?
29. எக்கனியை உண்ணக்கூடாது எனக் கடவுள் கூறியதாகப் பெண் (ஏவாள்) கூறினார்?
30. இறைவன் மோசேக்கு தன்னை எவ்வாறு அறிமுகம் செய்தார்?
31. இறைவன் மோசேயை எதற்காக அழைத்தார்?
32. விடுதலைப் பயண வேளையில் இஸ்ராயேலருக்கு ஆண்டவர் இரவிலும், பகலிலும் எவ்வாறு வழிகாட்டினார்?
33. பாலைவனத்தில் இஸ்ராயேலுக்கு கிடைத்த உணவுகள் எவை?
34. பார்வோன் மன்னனுக்காக எகிப்தில் இஸ்ராயேலர் கட்டிய களஞ்சிய நகர்கள் எவை?
35. மாராவில் கசப்பான தண்ணீர் எவ்வாறு சுவை பெற்றது?
36. விருத்தசேதனம் என்ற வெளிச்சடங்கின் மூலம் எதை அறிய முடிகிறது?
37. இறைவன் ஆதாமோடு செய்த உடன்படிக்கையை விளக்குக?
38. 10 கட்டளைகள் மூலம் எமக்கு விளக்கப்படும் செய்திகள் எவை?
39. இறைவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையில் காணப்படும் இரண்டு பிரதான விடயங்களும் எவை?
40. 10 கட்டளை கூறும் அயலவர் மட்டிலுள்ள கடமைகள் எவை?
41. திருமுழுக்கு யோவானின் பிறப்பு யாருக்கு அறிவிக்கப்பட்டது?
42. இறைவனின் செய்தியை நம்பாத செக்கரியா எவ்வாறு தண்டிக்கப்பட்டார்?
43. குருத்துவப்பணி மரபுக்கு ஏற்ப ஆண்டவரின் திருக்கோவிலுள் தூபம் காட்டுபவரை எவ்வாறு தேர்ந்தெடுப்பர்?
44. திருமுழுக்கு யோவான் எவ்வாறு இறந்தார்?
45. திருமுழுக்கு யோவான் தனது தூதுரைப் பணியை எப்பகுதிகளில் ஆரம்பித்தார்?
46. "இரண்டு அங்கியை உடையவர் இல்லாதவர்க்கு பகிர்ந்து கொள்ளட்டும்" என்ற அறிவுரை யாரால் யாருக்கு கொடுக்கப்பட்டது? (லூக் 3:11)
47. எச்சந்தர்ப்பத்தில் திருமுழுக்கு யோவான் சென்ம பாவத்திலிருந்து நீக்கப்பட்டார் என்பது திருச்சபையின் படிப்பினையாகும்?
48. பழைய ஏற்பாட்டில் மலாக்கி இறைவாக்கினர் திருமுழுக்கு யோவானைப் பற்றி கூறியது யாது?
49. திருமுழுக்கு யோவான் வரிதண்டுபவர்களுக்கு கொடுத்த அறிவுரை என்ன? (லூக் 3:13)
50. திருமுழுக்கு யோவான் யாருக்கெல்லாம் அறிவுரை கூறினார்?

## அமேசான் மா மன்றத்தை இயக்குபவர் தூய ஆவியார்

உலக ஆயர்கள் மாமன்றம் என்பது, தூய ஆவியாரின் தூண்டுதல் மற்றும், வழிகாட்டுதலில் ஒன்று சேர்ந்து நடப்பதாகும், இம்மாமன்றத்தின் முக்கிய கதாநாயகர் தூய ஆவியாரே, அவரைத் தயவுசெய்து, இந்த அரங்கைவிட்டு வெளியேற்றாமல் இருப்போம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மாமன்றப் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார்.

அமேசான் பகுதி பற்றிய உலக ஆயர்கள் மாமன்றப் பிரதிநிதிகள், வத்திக்கான் பேதுரு பசிலிக்காவில் விசுவாசிகளுடன் சேர்ந்து செபித்தபின், புனித திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கத்திற்குப் பவனியாக வந்தனர். காலை செபம் மற்றும், திருத்தந்தையின் தொடக்க உரையுடன் இந்த மாமன்றம் தொடங்கியது.

இஸ்பானிய மொழியில் தொடக்கவுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தூய ஆவியாரின் பணியை உறுதிசெய்யும் பொருட்டு நிறையச் செபிக்குமாறும், சிந்தித்து, கலந்துரையாடி, தாழ்மையுடன் உற்றுக் கேட்குமாறும், மாமன்றப் பரிதிநிதிகளிடம் கூறினார்.

**மாமன்ற நடைமுறைகள்**

தொடக்க உரையில், மாமன்ற நடைமுறைகள் பற்றி விளக்கிய திருத்தந்தை, புதிதாகப் பிறந்த குழந்தையைப் பராமரிப்பது போன்ற அக்கறையும், உடன்பிறந்த உணர்வு மற்றும், மதிப்பு நிறை சூழலும், நெருக்கமான உறவுக் காற்றும், இக்காற்று அடிக்கையிலேயே, அதை வெளியேற்றாமல் இருப்பதும், இதற்குத் தேவைப்படுகின்றது என்றும் கூறினார்.

இம்மான்றம் பற்றி செய்தியாளர்களுக்கு அறிவிப்பதற்குப் பொறுப்பானவர்கள் அதை ஆற்றுவார்கள், அதேநேரம், இந்த அரங்கத்திற்கு வெளியே, மக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினால், மாமன்ற நடைமுறை சிறிது சேதப்படுத்தப்படும் என்றும் திருத்தந்தை எச்சரித்தார். அமேசானில் வாழும் மக்கள் மீது, மேய்ப்புப்பணி இதயத்தையும், அம்மக்களின் வரலாறு, கலாச்சாரங்கள், வாழ்வு முறை ஆகியவற்றை மதிக்கும் அணுகுமுறை யையும் கொண்டிருக்குமாறு கூறியத் திருத்தந்தை, கருத்தியல் காலனி ஆதிக்கப் போக்கிற்கு எதிராய் தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.

மாமன்றம், வட்டரங்கு கலந்துரையாடலோ, பாராளுமன்றமோ, தொலைபேசி அழைப்பு மையமோ அல்ல, மாறாக, அது, மக்களைப் புரிந்துகொள்தலும், அவர்களுக்குப் பணியாற்றுவதுமே மாமன்ற நடைமுறையாகும்.

## விவேகம், மெய்யறிவு, தெளிந்து தேர்தலை, தூய ஆவியார் வழங்குமாறு செபித்தார்

அமேசான் பகுதியிலுள்ள திருஅவை, விசுவாசம் எனும் நெருப்பால் புதுப்பிக்கப்படுவதற்கு உதவும்பொருட்டு, அப்பகுதி பற்றிய உலக ஆயர்கள் மாமன்றத்தில் பங்கெடுக்கும் ஆயர்களுக்கு, விவேகம், மெய்யறிவு, மற்றும், தெளிந்து தேர்தலை, தூய ஆவியார் வழங்குமாறு செபித்தார்,

**அருள்கொடைகள், பணி மனப்பான்மை**

நாம் அருள்கொடைகளாக மாறும்பொருட்டு, அருள் கொடைகளைப் பெற்றுள்ளோம். இக்கொடைகள் வாங்கப்பட்டவையோ, வரத்தகம் செய்யப்பட்டவையோ அல்லது விற்கப்பட்டவையோ அல்ல, மாறாக, அவை பெறப்பட்டவை மற்றும் வழங்கப்பட வேண்டியவை. அவற்றை நமக்கெனவே வைத்துக்கொண்டால், நாம் ஆயர்களாக அல்ல, மாறாக, அதிகார மனப்பான்மையுடையவர்களாக இருப்பவர்கள் என்றார்.

அமேசான் பற்றிய, சிறப்பு உலக ஆயர்கள் மாமன்றத்தை, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி துவக்கி வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்திருப்பலியின் திமொத்தேயுவுக்கு எழுதிய இரண்டாவது மடலை மையப்படுத்தி மறையுரைச் சிந்தனைகளை வழங்கினார்.

**கரங்கள்**

*உன் மீது என் கைகளை வைத்துத் திருப்பணியில் அமர்த்தியபோது உனக்குள் எழுந்த கடவுளின் அருள்கொடையினைத் தூண்டி எழுப்புமாறு நினைவுறுத்துகிறேன்* (2திமொ.1:6) என புனித திமொத்தேயுவுக்கு எழுதினார். மாமன்றத் தந்தையரின் தலைகளில் கரங்கள் வைக்கப்பட்டுள்ளன. அதன் வழியாக அவர்கள், தங்கள் கரங்களை இறைத் தந்தையை நோக்கிச் செபிக்கவும், தங்கள் சகோதரர், சகோதரிகளுக்கு உதவுவதற்கு தங்கள் கைகளை நீட்டவும் இயலும் என்றும் திருத்தந்தை கூறினார்.

**விவேகம்**

மாமன்றத் தந்தையர், எதையும் எதிர்த்து நிற்பதற்கு அஞ்சாத விவேகத்தைப் பெறுவதற்கு, தூய ஆவியாரிடம் மன்றாடுவதாகவும், விவேகம் என்பது, தீர்மானம் எடுக்காமல் கோழை உள்ளத்தைக் கொண்டிருப்பது அல்ல, அது, தற்காப்பு எண்ணமும் அல்ல, மாறாக, விவேகத்தோடு பணியாற்றுவதற்கும், தெளிந்து தேர்வு செய்யும் திறனைக் கொண்டிருப்பதற்கும், தூய ஆவியாரின் புதியன செய்யும் செயலைப் பெறுவதற்கும், மேய்ப்பருக்கு இருக்க வேண்டிய புண்ணியமாகும் என்றும் விவேகம், எல்லாச் சூழல்களிலும் நமது உண்மையான நன்மையைத் தெளிந்து தேர்வு செய்வதற்கும், அதை எட்டுவதற்கு, சரியான வழிகளைத் தேர்ந்துகொள்வதற்கும் உள்ள புண்ணியமாகும் என்றார்.






**நெருப்பு**

அருள்கொடைகளை வழங்கும் தூய ஆவியாரை நெருப்போடு ஒப்பிட்டுப் பேசிய திருத்தந்தை, கடவுள் நமக்குக் கோழையுள்ளத்தினை அல்ல, வல்லமையும் அன்பும் கட்டுபாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ளார் என்று புனித பவுல், திமொத்தேயுவுக்குக் கூறியதைச் சுட்டிக்காட்டினார்.

**அமேசானில் தீ**

அமேசான் மழைக் காடுகளில் அண்மையில் ஏற்பட்ட தீ பற்றிக் குறிப்பிடுகையில், அது நற்செய்தியின் தீ அல்ல. கடவுளின் நெருப்பு, ஆதாயங்களால் அல்ல, மாறாக, பகிர்வால் ஊட்டம் பெறுகிறது. எல்லாரையும், எல்லாவற்றையும் ஒரேமாதிரியாக அமைப்பதற்கு முயற்சிக்கையில், மக்கள் தங்களின் சொந்த எண்ணங்களை மட்டுமே ஊக்குவிக்க விரும்புகையில், அழிக்கின்ற நெருப்பு கொளுந்துவிட்டு எரிகிறது. அது கடவுளின் நெருப்பு அல்ல, அது, உலகின் நெருப்பு என்றார்.

புதிய வடிவ காலனி ஆதிக்கத்தின் பேராசையிலிருந்து கடவுள் நம்மைப் பாதுகாப்பாராக, மக்களும், கலாச்சாரங்களும், அன்பின்றியும், மதிக்கப்படாமலும் பேரழிவுக்கு உள்ளாகின்றனர். அமேசானில் வாழ்கின்ற நம் சகோதரர், சகோதரிகள், கனமான சிலுவைகளைச் சுமக்கின்றனர். நற்செய்தியின் விடுதலையளிக்கும் ஆறுதலுக்காகவும், திருஅவையின் அன்பு நிறைந்த பராமரிப்புக்காகவும் ஆவலோடு காத்திருக்கின்றனர். அமேசானில் பல நம் சகோதரர், சகோதரிகள், தங்கள் உயிரையே அளித்துள்ளனர். நம் அன்புக்குரிய கர்தினால் Hummes அவர்கள், அமேசானில் சிறு நகரங்களிலுள்ள கல்லறைகளைப் பார்வையிட தவறாமல் செல்கிறார். அங்கு, சற்று விவேகத்துடன், அங்கு உயிரைக் கையளித்தவர்கள் புனிதர்களாக அறிவிக்கப்பட வேண்டியவர்கள், அவர்களை மறவாதீர்கள் எனவும் சொல்லி வருகிறார். அமேசானில் இப்போது தங்கள் வாழ்வை இழப்பவர்கள், ஏற்கனவே இழந்தவர்கள் ஆகியோருடன் இணைந்து நம் பயணத்தைத் தொடர்வோம் என்று கூறினார் திருத்தந்தை.

மாமன்றத் தந்தையர் பெற்றுள்ள அருள்கொடையினைத் தூண்டி எழுப்பும் நெருப்பு, தூய ஆவியாரிடமிருந்து வருகிறது, இவர்கள் இம்மாமன்றத்திற்கு அழைக்கப்பட்டிருப்பது பணிவிடை புரியவும், அவர்களின் பணியில் கடவுளை மையமாக வைக்கவும் அழைக்கப்பட்டுள்ளனர் என்பதை நினைவுபடுத்தினார்.

## 08 நீங்கள்....

மதச்சார்பின்மை எமது வரலாற்றில் கடவுளின் செயற்திறன் மிக்க தந்தையின் ஆக்கிரமிப்பு கலாச்சார நிராகரிப்பாக மாறும் போது உண்மையான மனித சகோதரத்துவத்திற்கு இது ஒரு தடையாகின்றது. கடவுளாகிய இயேசு கிறிஸ்து இன்றி ஒவ்வொரு வேறுபாடுகளும் இனவழிமையத்தை முடிவிற்கு கொண்டுவர வழி வகுக்கின்றது. திருச்சபையின் உலகலாவிய பணிக்கு ஒருவர் சொந்த நாடு மற்றும் இனக்குழுவில் உறுப்பினராக இருப்பதற்கான தனித்துவமான கருத்துக்களை ஒதுக்கி வைப்பது அவசியம் என்று திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் தனது அப்போஸ்தலிக்க கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இயேசு கிறிஸ்துவின் புத்துணர்சியூட்டும் தன்மைக்கு கலாச்சாரத்தையும் சமூகத்தையும் வெளிப்படுத்த ஒவ்வொரு விதமான தேவையற்ற இன மற்றும் திருச்சபை உள்நோக்கத்தையும் விட்டு விட வேண்டும். இன்று திருச்சபைக்கு ஆண்களும், பெண்களும், தேவைப்படுகின்றனர், அவர்கள் திருமுழுக்கின் மூலம் வீடு, குடும்பம், நாடு, மொழி, மற்றும் உள்ளூர் திருச்சபையை விட்டு வெளியேற்றி முழு உலகத்திற்கும் அனுப்பட வேண்டும் என்ற அழைப்பிற்கு தாராளமாக பதிலளிக்கின்றனர். கடவுளுடைய வார்த்தையை அறிவிப்பதன் மூலமும் நற்செய்திக்கு சாட்சியம் அளிப்பதன் மூலமும் ஆவியின் வார்த்தையை கொண்டாடுவதன் மூலமும், தனி நபர் ஒவ்வொருவரின் சுதந்திரத்தையும் மதித்து, மக்களின் கலாச்சாரங்கள் மற்றும் மதங்களுடன் உரையாடலில் ஈடுபடுவதற்கும் அழைக்கிறார்கள். இந்த மிஸ்சியோ டீ ஜெஸ்டின் (Missio ad gentes) என்பது திருச்சபைக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். இது அடிப்படை வாதத்தில் இருந்து கிறிஸ்தவர்களை மனமாற்றத்திற்கு கொண்டுவர உதவிபுரிகின்றது.

இயேசுவின் உயிர்ப்பு நிகழ்வில் நம்பிக்கை கொள்வது திருமுழுக்கினால் நாம் பெற்ற திருச்சபையின் பணியேயாகும். தன்னிடமிருந்தும் ஒருவரின் சொந்த வீட்டிலிருந்தும் புவியியல் மற்றும் கலாச்சாரப்பற்றின்மை, பாவத்திலிருந்து இரட்சிப்பின் தேவை மற்றும் தனிப்பட்ட சமூக தீமைகளிலிருந்து விடுபடுவது, உலகின் கடை எல்லை வரைக்கும் செல்லும் பணியை வெளிப்படுத்துகின்றது. அமோசானில் உள்ள திருச்சபை பற்றிய ஆயரவையின் இவ் நூற்றாண்டு கொண்டாட்டமானது நினைவூட்டுவது, இயேசு அவரின் தூய ஆவியின் கொடைகளுடன் எமக்கு ஒப்படைக்கப்பட்ட பணி எவ்வாறு அந்நாடுகளுக்கும், மக்களுக்கும் அவசியமானது என்பதை வலியுறுத்துகின்றது. இது பெந்தக்கோஸ்தே தினத்தின் போது புதுப்பிக்கப்பட்ட திருச்சபையின் கதவுகளை திறக்கவேயாகும்.

2007ம் ஆண்டு பிரேசிலின் அபரேசிடாவில் நடந்த லத்தின் அமெரிக்க ஆயர்களின் கூட்டத்தின் போது 16ம் ஆசீர்வாதப்பர் கூறிய வார்த்தை இங்கு எனக்கு நினைவூட்டப்படுகின்றன. இவ் வார்த்தைகளை மீண்டும் சொல்லி அவற்றை சொந்தமாக்க விரும்புகின்றேன். லத்தின் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளைப் பொறுத்தவரை அவர்களின் மத மரபுகளில் அதைப்பற்றி உணராமல் அவர்களின் மூதாதையர்கள் தேடும் அறியப்படாத கடவுளான கிறிஸ்துவை அறிவதே அவர்களின் நோக்கமாகும். திருமுழுக்கின் மூலம் அவர்களை கடவுளின் பிள்ளையாக மாற்றிய தெய்வீக வாழ்க்கையை அவர்கள் பெற்றுக்கொண்டார்கள் என்பதை இது குறிப்பிடுகின்றது. அத்தோடு பலனளிக்கும் கொடையான பரிசுத்த ஆவியையும் அவர்கள் பெற்று, அவ் ஆவியினால் அவர்கள் தூய்மையாக்கப்படுகின்றனர்.

திருச்சபையின் பணியை எமது அன்னை மரியிடம் ஒப்படைக்கின்றோம். மகனுடன் ஒன்றிணைந்து, மனித அவதாரத்துடன் ஆரம்பிக்கப்பட்ட வழியை கன்னி மரி தொடர்ந்தார். இவர் இயேசுவின் பணியில் முழுமையாக ஈடுபட்டார். இது சிலுவையின் அடிவாரத்தில் பிள்ளைகளை ஆவியின் விசுவாசத்தில் பிறப்பிப்பதற்காக ஒத்துழைக்கப்பட்ட பணியாகும்.

மேக்சிமம் இல்லூட்டில் ஏற்கனவே கூறப்பட்ட ஒரு பணியின் வளத்தினை பாப்பிறை மறைபரப்பு சபைகள் பற்றிய சுருக்கமான வார்த்தையுடன் முடிக்க விரும்புகின்றேன். இந்த பாப்பிறை மறைபரப்பு சபைகளானது, உலகலாவிய ரீதியில் வலைப்பின்னலாக செபம், பணியின் ஆன்மா மற்றும் உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்களுக்கு பணி போன்றவற்றிக்கு உதவி செய்கின்றது. இவர்களின் நன்கொடையானது திருச்சபையின் மறைபரப்பு முயற்சிக்கும், உள்ளூர் குருமார்களின் பயிற்சிக்கும், குழந்தைகளின் உருவாக்கத்திற்கும், பணியைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கிறிஸ்தவ விசுவாசத்தின் பணி பரிமாணத்தை ஊக்குவிப்பதிலும் இவை உறு துணையாக இருக்கின்றது. பணிபுரியும் ஆண், பெண்கள் மற்றும் திருமுழுக்கிற்கு விசுவாசமாக இருப்பவர்களுக்கும், திருச்சபையின் பணியினை பகிர்ந்து கொள்ளவும், நான் எனது இதய பூர்வமான ஆசீர்வாதத்தை தெரிவிக்கின்றேன்.

- **திருத்தந்தை பிரான்சிஸ்**

2010 - 2020



# மன்னார் மறைசாட்சிகள்

02

## மானிடவியல் கண்ணோட்டத்தில் சமூகவியல் வரலாறு....

சென்ற வார தொடர்ச்சி....

அருட்பணி.
அருள் பிரகாசம்

சின்னக்கரையார் பட்டணம் என்பது ***பட்டிம்*** அதாவது பட்டித்தோட்டத்தைப் பற்றியே குறிக்கிறதாகவும் தெளிவுபடுத்துகின்றார்.

### மன்னார் மாதோட்ட வரலாறு

இராமபிரான் சீதையை மீட்க இலங்கைக்கு வந்த போது கடல் நீர் காரணத்தால் தாம் அணிந்திருந்த ஆடைகளை மன்னிக் கொண்டு வந்த மகளீர் குடிகொண்ட பூமி மன்னார் எனப்பட்டது என சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். ***மன்*** என்பது அரசன் ***ஆர்*** என்பது பூமி அதாவது மக்கள் குடியேற்றமில்லாத பூமியாக இருந்தபடியால் மன்னார் அதாவது அரசனுடைய பூமி எனவும் அழைக்கப்பட்டதாக சிலர் கூறுவர். அத்துடன் அராபியர்கள் சில காலம் குடியேறி வாழ்ந்தனர் என்றும் மன்னாரில் காணப்படும் பெருக்க மரத்தை அவர்கள் தமது ஒட்டகங்களுக்கு உணவு கொடுக்க கொணர்ந்து நாட்டினர் எனவும் அறிய முடிகின்றது. ஒரு தமிழ் அரசன் பரதவரையும் கடஞரையும் மன்னார்த்தீவில் குடியேற்றினான் என்றும் சிலர் கூறுவர். குடியேற்றிய ஆண்டு சரியாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டின் தூத்துக்குடிக் கரையிலிருந்து குருகுலத்தைச் சேர்ந்த தமிழர்கள் முத்துக் குளிப்பிற்க்காகவும் கடற்தொழிலுக்காகவும் இலங்கையின் மேற்குக் கரையோரங்களில் குடியேறினர். நீர்கொழும்பில் இன்றுள்ள பரத குலத்தவர்கள் இவ்வாறு குடியேறியவர்களின் வழித்தோன்றல்களாகும். (சின்னதம்பி: தமிழீழம் : பக.9) மன்னார்த் தீவில் இரண்டு கரையாருடைய பட்டணங்கள் இருந்ததாக கென்றிக் கென்றிக்கஸ் அடிகளார் கூறுகின்றார். ஒன்று பெரிய கரையார் பட்டணம் மற்றையது சிறிய கரையார் பட்டணம். பெரியகரையார் பட்டணத்தில் கரையாரும் பரதரும் வாழ்ந்தனர் என்றும் அவர்கள் இந்திய கரையோரங்களிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் என்றும் கூறுகின்றார். இக்கிராமம் சந்தோம் பட்டணம் என்று அழைக்கப்பட்டதாகவும், தற்போது எருக்கலம்பிட்டி என்று அழைக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடுகின்றார்.

*கோட்டைக்கு அரை மைல் தூரம் (2 கிலோ மீற்றர்) ஒரு கிராமம் இருக்கின்றது. அவர்கள் பட்டிம் என்று அழைக்கின்றார்கள். நாங்கள் இத்தீவுக்கு வருவதற்கு முன்னரே கிறிஸ்தவர்களாக மாறிய இத்தீவைச் சேர்ந்த கரையார் என்ற கிறிஸ்தவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். நாங்கள் இத்தீவிற்கு வந்தபோது அவர்கள் இத்தீவில் இருக்கவில்லை. அரசனால் பல்வேறு வகையிலே துன்புறுத்தப் பட்டதனால் அவர்கள் அவ்விடத்தை விட்டு வேறிடம் சென்றிருந்தனர். இப்பொழுது அவர்கள் அவ்விடத்திற்கு வந்துவிட்டார்கள். ஒரு குருவானவர் ஒவ்வொரு செவ்வாய் கிழமையும் வந்து, திருப்பலி நிறைவேற்றி, ஒருநாள் முழுவதும் பட்டித்தோட்டத்தில் தங்கி பணியாற்றிவிட்டுச் செல்கின்றார். ஆற்றுக்கு அப்பாலுள்ள இடத்தைச் சேர்ந்த கரையாரும் இவ்விடத்திற்கு நாங்கள் வருவதற்கு முன்னரே வந்து விட்டார்கள். அவர்கள் தங்களுடைய உறவினர்களிடமே வந்து சேர்ந்து இப்போது திருமுழுக்கு பெற்றுள்ளார்கள். புதிதாக இப்போது திருமுழுக்குப் பெற்றவர்கள் மொத்தம் 200 பேராகும்.*

*(கடிதம் : அருட்த்தை அன்றிக் அன்றிக்கஸ் :1561)*

இயேசுவின் சீடர்களுள் ஒருவரான தோமையார் இலங்கையில் வந்து சத்திய மறையைப் போதித்தார் என்பதற்கு மன்னார்த்தீவே ஆதாரமாகவுள்ளது. மன்னார்த்தீவின் ஒரு பகுதி சந்தோம் பட்டணம் என அழைக்கப்பட்டதாக ஒரு வரலாறும் உண்டு. இவ்வாறு பல வரலாற்று அம்சங்களைக் கொண்டதாக மன்னார்த் தீவும் மாதோட்டமும் விளங்குகின்றது.

### 1.1 மாந்தை நகர்

மாந்தையானது இலங்கையில் முதன் முதல் உருவாகிய துறைமுகநகர் என்றும் முதல் நாகரீகமடைந்த மக்கள் வாழ்ந்தனர் என்றும், நகர கட்டமைப்பு முறையாக கட்டப்பட்டதென்றும் கூறுவதோடு அதாவது வீடுகள் அமையும் இடம், பிரதான பாதைகள், கடைத்தொகுதிகள் எவ்விடம் அமையவேண்டும், அரண்மனை மாளிகைகள் எப்படி அமைக்கவேண்டும். கடல் வாணிபம் எப்படி மேற்கொள்ள வேண்டும், விவசாய நிலங்கள் எங்கு அமைக்கப்பட வேண்டும், குளங்கள் மற்றும் நீர்ப்பாசன முறைகள் எவ்வாறு இருக்க வேண்டும் எனத் திட்டமிடப்பட்டு இம் மாந்தை நகர் அமைக்கப்பட்டதாகவும். மாந்தை அரசின் எல்லை புத்தளம்வரை செல்வதாகவும் மேலும் மாந்தை தொன்மைவாய்ந்த சர்வதேச துறைமுகம் எனவும் எல்லாவல என்னும் வரலாற்று சமூகவியல ஆய்வாளர் தனது Social history of Early Ceylon ( எல்லாவல 19969 : 116-121) என்னும் நூலில் வெளிப்படுத்தியுள்ளார். முதல் முதல் உருவாக்கப்பட்ட மாதோட்ட அரசானது வரலாற்றில் நீண்ட காலம் நிலை பெற்ற அரசாகும்.

### 1.2 மன்னார் மாதோட்ட பூர்வீக குடியிருப்பாளர்கள்

இலங்கை வரலாற்று மரபு பற்றிய கோட்பாட்டின் படி, எமது பூர்வீக குடிகளாக இயக்கர், நாகர், வேடர் சமூகத்தினரே என அனைத்து வரலாற்று, சமூகவியல், மானிடவியல் ஆய்வாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இப் பூர்வீக மக்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இங்கு வாழ்ந்தார்கள் என்ற சான்றுகள் உள்ளன. இலங்கையில் வாழ்ந்த பெரும்பான்மையான சமூகத்தவர்கள் நாகர்களாவர்.. இவர்கள் தமக்கென பல அரசுகளை அமைத்து தமக்கே உரித்தான திராவிட கலாசாரத்தில் மேலோங்கி வாழ்ந்தனர். ஈழத்துத்தமிழ் நாகர்கள் இந்தியாவிலிருந்தோ அல்லது வேறு இடங்களில் இருந்தோ வந்தவர்களல்ல மாறாக முற்கால லெமூரிக்கண்டம் கடல் கோள்களால் அழிக்கப்பட்ட போது இலங்கை ஒரு தனித்தீவாகப் பிரிக்கப்பட்டது. அவ்வேளையில் அங்கிருந்த மக்களான இயக்கர், நாகர், வேடர் ஆகியோர் அப்படியே பிரிக்கப்பட்டு இலங்கையில் பூர்வீக சுதேச மக்களாக வாழ்ந்து வருகின்றனர்.

தொடரும்.....

## புன்னகை



ஒருவரை ஒருவர் புன்னகையோடு
சந்திப்போம்
ஏனெனில் புன்னகையே அன்பின்
ஆரம்பம்,
அதுவே சமாதானத்தின் தொடக்கம்!

ஓர் அன்பின் வெளிப்பாடு, ஓர்
அன்பளிப்பு, ஓர் அழகு,

எளிய புன்னகை எல்லாவற்றையும்
சாதித்து விடும்,
புன்னகையுடன் ஆரம்பிக்கிறது சமாதானம்.

புன்னகையோடு கொடுப்பவரே உன்னதமான
கொடையாளி!

புன்னகைக்க முடியாத தருணங்களிலும்
ஒருவரையொருவர் புன்னகையோடு சந்திப்போம்

எளிதில் தொற்றிக் கொள்ளும்
ஓர் அருள்,

ஆம் புன்னகைக்க முடியாதவரானால் புண்ணியம்
செய்ய முடியாது...!

## செபம்



குறைவான வார்த்தைகளுடனான செபம்
உயர்வான செபமாகும்,
என் கடமைகளில் எளிமையானதும்,
இனிமையானதும், செபம் தான்!

புதுமைகளுக்கு அழைத்துச் செல்லும் வழி
செபம்,

கடவுளின் ஒரே வேலை நம்பிக்கையுடன்
செபிப்பவர்களுக்கு செவிமடுப்பதுதான்,

செபம் ஆன்மீக ஆவி, அது உண்மைக்கு
உண்மையை பேசும்.

விண்ணகத்தில் இருந்து பலத்தைப்பெறும்.
பெரிய வழி செபம்.

ஒரு நாளை, காலையில் திறப்பதும்,
இரவில் அதனை மூடுவதும் செபம்,

இறைவனில் நம் இல்லத்தை அமைத்து தருவது
நாம் தரும் செபம்!!

## ஒன்றிப்பு




உடல் ஒன்றிப்பு...
உள ஒன்றிப்பு...
சிந்தனை ஒன்றிப்பு...

மூன்றையும் முழுமையாய் பெற
செபமாலையே செபம்!

மெத்தப் படித்த மேதாவிகள் கூட,
காலம் போன கடைசியில் உள்ளத்தால்,
சிந்திக்கும் உன்னதமான வழி
செபமாலை!!!

அக்டோபர் 20 ஆம் திகதி

# தீவிரவாதியான திருத்தூதர் புனித சீமோன்




திருத்தூதர் சீமோனை நற்செய்தியில் தீவிரவாதி என்று குறிப்பிடுவதால் இவர் அக்கால யூதத் தீவிரவாத அமைப்போடு தொடர்பு கொண்டிருந்தவர் என்று அர்த்தமல்ல. சீமோன் இயேசுவைப் பின்தொடர்வதற்கு முன், யூதச் சட்டத்தின் மீதும், கனானேயச் சட்டத்தின் மீதும் தீவிரப் பற்றுக்கொண்டிருந்தவர். மேலும் திருத்தூதர் பேதுருவிலிருந்து இவரைப் பிரித்துக் காட்டுவதற்காக, இவர் தீவிரவாதியாய் இருந்த சீமோன் என்று சுட்டிக்காட்டப்படுகிறார்.

இயேசு தொழுகைக் கூடத்தில் கற்பித்தபோது அதைக் கேட்ட பலர் வியப்பில் ஆழ்ந்து, **சின்ன யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா** (புனித மாற்கு 6:3) எனக் கேட்டபோது, இவரது பெயர் இடம் பெறுகின்றது.

தீவிரவாதி சீமோனும், எருசலேமின் முதல் ஆயர் சின்ன யாக்கோபும் சகோதரர்கள். கத்தோலிக்க கலைக் களஞ்சியத்தின்படி, தீவிரவாதியாய் இருந்த சீமோனும், எருசலேம் சீமோனும் ஒரே ஆள்தான். திருத்தூதர் சீமோன், எருசலேமின் இரண்டாவது ஆயராகப் பணியாற்றியவர்.

இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பின் பெந்தக்கோஸ்து நாளில் (தி.பா.2:1-4) அன்னை மரியா மற்றும் 12 சீடர்களுடன் புனித சீமோனும் தூய ஆவியாரால் திருப்பொழிவு பெற்றுக் கொண்டு நற்செய்தியை போதிக்கச் சென்றார். எகிப்து, மெசபத்தோமியா ஆகிய நாடுகளில் திருப்பணி

இயேசு தம்மோடு இருக்கவும், நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும், பேய்களை ஓட்ட அதிகாரம் கொண்டிருக்கவும் பன்னிரு சீடர்களை நியமித்தார். அவர்களுக்கு திருத்தூதர் என்று பெயரிட்டார். திருத்தூதர்கள் பன்னிருவருள் தீவிரவாதியாய் இருந்தவர் சீமோன் (புனித மாற்கு 3:13-19) திருத்தூதர்கள் பல்வேறு பின்னணிகளைக் கொண்டிருந்தவர்கள். உரோமைப் பேரரசுக்கு வரிதண்டும் வேலை செய்தவர் மத்தேயு. தீவிரவாதியாய் இருந்த சீமோன், வித்தியாசமான சூழலிலிருந்து வந்தவர்.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

இவ்வார புனிதர்

## புனித மரிய பவுஸ்தினா

சென்ற வார தொடர்ச்சி......

லிப்ஸித் அவர்களுக்கு நான்கு குழந்தைகள் இருந்தார்கள். ஹெலன் அனைவருடனும் அன்பாகவும் சந்தோஷமாகவும் தனது கடமைகளை புரிந்தார். திருமதி லிப்ஸித் ஹெலனுக்கு மடத்திற்கு செல்வதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கினார்.

1925 ஆவணி மாதம் 01ஆம் திகதி தேவதூதர்களின் அன்னையின் திரு நாளன்று ஹெலன் அனைத்து சவால்களையும் வென்று மரியாவின் இரக்க கன்னியர் சபையில் சேர்ந்தார். 1925 ஆண்டு தொடக்கம் 1933 வரையிலும் பயிற்சி பெற்றார்.1933 ஆம் ஆண்டு வைகாசி மாதம் முதலாம் திகதி ஹெலன் மரியாவின் இரக்க கன்னியர் குழுமத்தில் ஒரு துறவியாக நிரந்தர உறுதிமொழி அளித்தார். அருட் சகோதரி மரிய பவுஸ்தினா (ஹெலன்) என்னும் பெயர் அவர் துறவற குழுமத்தில் இணைந்த போது பெற்றுக்கொண்ட பெயர் ஆகும்.

அருட் சகோதரி மரிய பவுஸ்தினா தனது கடமைகளான சமையல், பேக்கர் தோட்ட வேலை, காவல் புரிதல் போன்ற வேலைகளை சந்தோஷத்துடன் செய்தார். அவர் துறவற வாழ்க்கையில் பெற்ற மகிழ்ச்சியைப் போலவே மன வேதனைகள், உடல் வேதனைகள் (அவர் காச நோயால் பீடிக்கப்பட்டிருந்தார்) பொய்க் குற்றச் சாட்டுகள், அவரைப் பற்றி விமர்சித்து அவமானப்படுத்தியது போன்ற அனைத்தையும் பொறுமையுடன் சகித்து அவற்றை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தார். தேவ அன்னை பல சந்தர்ப்பங்களில் துணையானார். புனித வளனார், புனித தெரேசா, புனித பார்பரா அவருடைய பாதுகாவலரான தேவ தூதர் ஆகியோரும் துணை புரிந்தனர். அவரது ஆன்மீக தந்தையர்களும் அவருக்கு உதவினார்கள். ஆலோசனை கூறினார்கள். 1931 ஆம் ஆண்டு மாசி மாதம் 22ம் திகதி இயேசு நாதர் அருட்சகோதரிக்கு மரிய பவுஸ்தினாவுக்கு முதல் முறையாக காட்சியளித்தர். 1934 ஆம் ஆண்டு 2ஆம் திகதி இயேசுநாதர் அருட் சகோதரிக்கு பவுஸ்தினாவுக்கு இவ்வாறு கூறினார்.

'எனது இரக்கத்தைப் பற்றி நான் கூறும் ஒவ்வொரு வசனத்தையும் பல ஆன்மாக்களின் நன்மையைக் கருதி கவனமாக எழுதுங்கள் (நாட்குறிப்பு 1142)

1938 ஆண்டு ஆடி சிரேஷ்ட தாயார் மயிகள் நோயுற்றிருந்த அருட் சகோதரி மரிய பவுஸ்தினாவை பார்ப்பதற்கு வைத்தியசாலைக்கு வந்தார். அப்போது அருட் சகோதரி மரிய பவுஸ்தினா அக்காலப் பகுதியில் நடந்த அனைத்து நிகழ்வுகளையும் தாயாருக்கு கூறினார். சிரேஷ்ட தாயார். அவரிடமிருந்து விடைபெறும்போது 'ஓ தாயே, இயேசு நாதர் எனக்கு எவ்வளவு அழகானவைகளை கற்பித்தார்" அத்துடன் அவர் எழுதிய புத்தகத்தைக் காட்டி, 'தாயே, நீங்கள் அனைத்தையும் வாசிப்பீர்கள் என்று கூறினார். இன்னும் அருட்சகோதரி மரிய பவுஸ்தினா கண்ட தரிசனங்களுக்கு நம்பிக்கையோடு சான்று பகர்ந்ததற்காகவும் நன்றி இயேசு என்னை ஒரு புனிதராக்குவார் என்றும் கூறினார்.

அருட் சகோதரி மரிய பவுஸ்தினாவின் ஆன்மிக குழுமத்தைச் சேர்ந்த ஏனைய அருட் சகோதரிகள் அவரை சுற்றி நின்றனர். அருட் சகோதரி மரிய பவுஸ்தினா அனைவருக்கும் நன்றி கூறினார். பி. ப 4.00 மணிக்கு அவருக்கு ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. அவர் மிக்க உடல் வேதனையடைந்தார். 1938ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 05ம் திகதி அருட் சகோதரி பிலிஷியாவுக்கு இறைவன் இன்று என்னை எடுப்பார் என்று மெதுவாகக் கூறினார். இரவு 9.00 மணிக்கு அருட் தந்தை ஸ்சபுட, அருட்சகோதரிகள் அனைவரும் அவரைச் சுற்றி நின்று செபித்தனர். அருட்சகோதரி மரிய பவுஸ்தினா அனைவருக்கும் நன்றி கூறியதுடன் அனைவரும் பிரிந்து சென்றனர். அருட்சகோதரி மரிய பவுஸ்தினா விண்ணகத்தை நோக்கி கண்களை உயர்த்தி தரிசனம் காண்பது போல் அமைதியாகவும் சமாதானமாகவும் விண்ணகப் பேற்றையடைந்தார்.

1993ஆம் ஆண்டு சித்திரை மாதம் 18ஆம் திகதி உயிர்ப்பின் முதலாம் ஞாயிறு அன்று திருத்தந்தை அருள் சின்னப்பர் அருட் சகோதரி மரிய பவுஸ்தினாவை அருளாளராகவும் 2000ஆம் ஆண்டு சித்திரை மாதம் 30ஆம் திகதி உயிர்ப்பின் முதலாம் ஞாயிறன்று அருளாளர் மரிய பவுஸ்தினாவை புனிதராகவும் பிரகடனப்படுத்தினார்.

அவரது திருவிழா ஐப்பசி மாதம் 05ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

# நானே உலகின் ஒளி....
# தீப ஒளி திருநாள் வாழ்த்துக்கள்!



*ஐப்பசி 27*

**இருளிலும் இறப்பின் பிடியிலும், இருப்போர்க்கு ஒளி தர விண்ணிலிருந்து நம்மைத் தேடி வந்த விடியல். யார் அந்த விடியல்? மனுவுருவெடுத்த இயேசுவே என்று செக்கரியா புகழ்கின்றார்.**

**(புனித லூக் 1:28)**

**பிரம்மனின் அவதாரமான இராமர் தீமையை வென்று அறத்தை நிலைநாட்டியதை தீபத்திருநாளாக நம் இந்து சகோதர சகோதரிகள் கொண்டாடுகின்றனர்.**

**ஆகவே, இறைவன் அகத்தின் இருள் அகற்றி, அமைதியின் ஒளியால் தீமையையும், அநீதிகளையும், பாவத்தையும் சுட்டெரித்து ஒளியாம் இயேசுவில் ஒப்புரவாகுவோம். உண்மைக் கேற்று வாழ்ந்தால்**

**ஒளியின் இணைந்து இருப்போம். அதாவது, இயேசு கிறிஸ்துவோடு இணைந்திருப்போம்**

ஒளியின் விழாவினை
ஒற்றுமையாய்
கொண்டாடுவோம்
களிப்புடன் யாவரையும்
கரம் கூப்பி வாழ்த்திடுவோம்

இருக்கின்ற உள்ளங்கள்
இல்லாத வரை
நினைக்கட்டும்
இருள் நீக்கி ஒளியேற்றி
இன்பமாய் வாழ்த்தட்டும்.

வருத்தங்கள் போக்கிட
வளமான வாழ்க்கையை
தருகின்ற நாளாக
இந்நாளை மாற்றிடுவோம்

பட்டாசின் ஒலியோ
படபடக்கும் வீதியிலே
பட்டினியின் ஓலங்கள்
பறந்து போகும் காற்றினிலே

எட்டாத உயரத்தில்
இருளின் ஆட்டங்கள்
எட்டாத கனிக்காய்
ஏங்கிடும் ஏழைகள்

உள்ளோருக்கும் மட்டும்
உலகத்தின் சுகபோகம்
இல்லார்க்கு என்றுமே
இழி சொல்லும், பழி
சொல்லும்

இந்நிலைகள் ஒழிந்தாலே
எல்லோர்க்கும்
கொண்டாட்டம்
இந்நாளில் சிந்திப்போம்
இரக்கத்தை நேசிப்போம்.

அகலட்டும் இருள்
ஒளிரட்டும் ஒளி
மலரட்டும் நேயம்
மகிழட்டும் வையகம்.

**ஒளியாம் இயேசுவே...**
**என் பாதைக்கு விளக்கு!**
**அவரே என் வாழ்க்கைக்கு துணையாகும்!!**

## 01 தேசிய திருத்தலமாக...

கடந்த ஞாயிறு 13ம் திகதி ஐப்பசி 2019 அன்று திருத்தலமாக திருநிலைப்படுத்தியதை உத்தியோகபூவமாக அறிவித்து வழிபாடுகள் நடத்தப்பட்டன. இத்திருப்பலி வழிபாட்டில் மறைமாவட்ட பரிபாலகர் அருட்தந்தை டெனின்டன் சுப சிங்க அடிகளாருடன் கொழும்பு இறையியல் கல்லூரி அருட்தந்தை செரோன் டயஸ் அடிகளார், திருத்தல பரிபாலகர், பங்கு மக்கள் பலர் கலந்து இறையாசீர் பெற்றுக்கொண்டனர்.

**தகவல் மற்றும் படம் : T. சுனில்**

## 01 புதுச்செட்டித்தெரு....

பங்குத்தந்தை அருட்பணி. மனோகுமரன் நாகரட்ணம் அடிகளார் எமது பங்கின் யூபிலி ஆண்டை பிரகடனம் செய்து வைத்தார். இவ்வாண்டு தொடக்கம் அடுத்த ஆண்டு வரை எமது ஆலயம் யூபிலி ஆண்டாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

## 01 பாஸ்கு ஞாயிறு...

பாஸ்கு ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த குடும்பத்தினரையும், காயங்களுக்குள்ளானவர்களையும் 11ம், 12ம், 13ம் திகதி ஐப்பசி மாதம் 2019அன்று, 16 அரச பேருந்துகளில் மன்னார் மருத மடு மாதா ஆலயத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு காலை உணவு வழங்கப்பட்டு அங்கிருந்து தோட்டவெளி புனித செபமாலை மாதா, வரலாறு படைத்த மறைசாட்சிகளின் ஆலயத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

அங்கு தோட்டவெளி மறைசாட்சிகளின் திருத்தல பரிபாலகர் பெனோ அலெக்சாண்டர் அடிகளார் அனைவரையும் அன்புடன் கரம் கொடுத்து வரவேற்றார்.

பின்பு அருட்தந்தையர்கள் கூட்டாக திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். திருப்பலி மறையுரையின் போது அருட்தந்தை பிரசன்ன அடிகளார் மறைசாட்சிகளின் வரலாற்றை எடுத்துரைத்தார்கள் அவர்களிடம் வேண்டும் மன்றாட்டுகள் நிறைவேறுவதாகவும் கூறினார். தமிழ் மொழியாக்கம் அருட்தந்தை அன்ரன் அடிகளார் தொகுத்து வழங்கினார். (ஞான ஒளியில் ஐப்பபசி மாதம் 06ம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக வரும் மறைசாட்சிகளின் வரலாறு வாசித்து பயனடையவும்)
பாஸ்கு குண்டு தாக்குதலினால் உயிரிழந்த குடும்பத்தினரையும் காயங்களுக்கு உள்ளானவர்களும் இறைவனின் அன்புக்கு உட்பட்டவர்கள் என்று கூறி, அன்று இறந்தவர்களும் மறைசாட்சிகளாக உயர்த்தப்பட தகுதியுள்ளவர்கள் என்று கூறினார்கள். அதனால் உயிரிழந்தவர்களிடம் வேண்டுதல்களை சமர்ப்பித்து எங்களுக்காக இறைவனிடம் மன்றாடுமாறும் அதன்பின்பு அவ்வேண்டுதல்கள் நிறைவேறியதும் அந்த அனுபவத்தை எழுதி தமக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்கள்.
பின்பு மதிய உணவின் பின்பு மீண்டும் மருதமடு மாதா ஆலயத்திற்கு வந்து இரவு, அருட் தந்தை கலன அடிகளாரினால் குணப்படுத்தல் வழிப்பாடு இரு மொழிகளிலும் வழங்கப்பட்டது. அடுத்தநாள் ஞாயிறு அன்று காலை 11 மணிக்கு விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியின் பின்பு அருட்தந்தை லோறன்ஸ் இராமநாயக்க அடிகளார், இந்த மூன்று நாட்கள் திருப்பயணங்கள் எமக்கு கிடைத்திருக்கும் நிதியிலே வந்ததாகவும் பாதிக்கப்படட மக்களுக்கு ஆன்மீக, மன குணப்படுத்தல்கள் அவசியமாக இருந்ததால் அதற்கான முன்னெடுத்தலாக இத்திருப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், எமது மக்களின் ஆத்ம கௌரவத்தை பாதுகாக்கவே ஊடகங்களுக்கு அறிவிக்க-வில்லை என்றும் ஆனாலும் எமது கத்தோலிக்க ஊடகமான வேர்பூம் மாத்திரம் எம்மோடு தங்கியிருக்க அனுமதி வழங்கியதாகவும் கூறினார்கள்.

இறுதியில் குழு புகைப்படம் எடுத்த பின்பு மீண்டும் கொழும்பு நோக்கி பயணித்தனர்.

## 01 இறைபதம் அடைந்தார்

தலைமைக் குருவாகப் பணியாற்றினார். சென்னை-மயிலை உயர்மறைமாவட்டத்தில் பல்வேறு முக்கிய பணிகளை வகித்துள்ள இவர், சென்னை பூந்தமல்லி இயேசுவின் திருஇதய இறையியல் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

2018ம் ஆண்டு ஜூலை 14ம் தேதி, தனது 75வது வயதில் திருச்சி மறைமாவட்ட மேய்ப்புப்பணி நிர்வாகத்திலிருந்து ஓய்வுபெற்ற ஆயர் டிவோட்டா அவர்கள், தனது 77வது வயதில், இச்செவ்வாயன்று இறைபதம் சேர்ந்தார். மறைந்த ஆயர் டிவோட்டா அவர்களுடைய கண்களும், இறந்த சில மணி நேரங்களுக்குள் திருச்சி புனித ஜோசப் மருத்துவமனைக்கு கண்தானம் செய்யப்பட்டுவிட்டன.

## 09 நீங்கள்...

வாழ்க்கையை அர்ப்பணிக்க தயாராக இருக்கின்றார்கள் என்பதேயாகும். புனித பவுலின் பணிவாழ்வைப்போல் கத்தோலிக்கரும் தயக்கமின்றி சோர்வடையாமல் இருக்க வேண்டும். உங்கள் மரணம் வரை நற்செய்தியை அர்ப்பணிப்புடன் அறிவிப்பது என்பது ஒரு ஓட்டப்பந்தயம் போன்றதாகும். மறைசாட்சிகளின் இராக்கினியும், மறைபரப்பின் நட்சத்திரமுமான அன்னை மரியாள் சாட்சியத்தின் வாழ்வு வாழ எமக்கு உதவி செய்கின்றார். (திருத்தந்தை 16ம் ஆசிர்வாதப்பர், வத்திக்கான் நகர் ஐப்பசி 28, 2007).

இயோசுவோடு மிக ஆழமான உறவை வளர்த்துக் கொள்வதற்காக மறைபரப்பு மாதத்தில் கத்தோலிக்கர்களை ஒரு சிறந்த வழியில் ஊக்குவிக்க இது வழிகாட்டுகின்றது. விஷேடவிதமாக மறைபரப்பு மாதமாகிய ஐப்பசி மாதத்தில் அனைத்து ஆசிய நாடுகளையும் அர்ப்பணிப்புடன் செபிக்குமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன். “திருமுழுக்குப்பெற்று அனுப்பட்டுகின்றீர்கள்” எனும் கருப்பொருளை வைத்து உங்களின் நற்செய்திப்பணியை தொடருங்கள். “நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள், தந்தை மகன் தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்.” (மத்:28:19)

**இறையாசீர் உதித்தாகுக.**

## 14 தீவிரவாதியான...

புரிந்தாலும், புனித யூதா ததேயுவை பெர்சியாவில் சந்தித்து ஒன்றாக நற்செய்தி போதித்ததாக கூறப்படுகின்றது. இவர் சமாரியாவில் சிலுவையில் அறையப்பட்டார் என்று எத்தியோப்பியக் கிறிஸ்தவர்கள் சொல்கின்றனர். சீமோனும், ததேயுவும் பெரிசிய நாட்டில் நடந்த சிலை வழிபாட்டுக்கு எதிராகக் குரல் கொடுத்ததால் ததேயு ஈட்டியால் குத்தப்பட்டு கொல்லப்பட்டார். சீமோன் ரம்பத்தால் துண்டு துண்டாக அறுக்கப்பட்டு பின் ஈட்டியால் குத்தப்பட்டார். திருத்தூதர் சீமோன் இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கையினாலும், செபத்தினாலும் அனைத்து இடர்களையும் தகர்த்து, தன்னுடைய பணியைத் தொடர்ந்து செய்து கொண்டே இருந்தார். இறுதியில் இயேசுவுக்காகக் கொல்லப்பட்டார். கிறிஸ்தவ ஓவியக் கலைஞர்களால் திருத்தூதர் சீமோன் ரம்பத்தைக் கொண்டிருப்பவராகச் சித்தரிக்கப்படுகிறார். இவர் தோல் பதனிடும் தொழிலாளரின் பாதுகாவலர். இவரது நினைவு நாள் அக்டோபர் 20 ஆம் திகதி சிறப்பிக்கப்படுகிறது.

**சீமோன் இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கையினாலும், செபத்தினாலும் அனைத்து இடர்களையும் தகர்த்து, தன்னுடைய பணியைத் தொடர்ந்து செய்து கொண்டே இருந்தார்**

**திருத்தூதர் சீமோன், எருசலேமின் இரண்டாவது ஆயராகப் பணியாற்றியவர்**

## 10 விவிலிய வினா விடை

117. மோசே (7:10)
118. கடவுளுக்கு காணிக்கையாயிற்று
119. பரத்மை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, செருக்கு, மதிக்கேடு.(7:21-22)
120. தீர் (7:24)
121. சிரிய பெனிசிய இனத்தை சேர்ந்தவர் (7:26)
122. இயேசு (7:29)
123. கலிலேயா கடலை அடைந்தார் (7:31)
124. திறக்கப்படு 7:34)
125. 3 நாட்கள் (8:2)
126. சீடர்கள் (8:4)

**நாம் கொண்டிருக்கும் திறமைகளையும் ஆற்றலையும் கண்டுகொண்டு, அவற்றை மற்றவர்களின் சேவைக்கென பயன்படுத்தும் சவாலை கைக்கொள்வதற்குரிய அழைப்பை இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் கொடுத்துள்ளார்.**

**‘நம் உச்சகட்ட நோக்கம் என்பது, இயேசுவை சந்திப்பதாகும் என்பதை இந்நாளின் நற்செய்தி நமக்குச் சொல்லித் தருகின்றது. அவரே நம்மை தீமைகளிலிருந்து விடுவித்து நம் இதயங்களைக் குணப்படுத்துகிறார். அவருடன் நாம் மேற்கொள்ளும் சந்திப்பே நம்மை மீட்க முடியும், மற்றும், நம் வாழ்வை முழுமையானதாகவும், அழகானதாகவும் மாற்றமுடியும்’,**



## மணமகன் தேவை

1985ம் ஆண்டு அழகிய தமிழ் வங்கி உத்தியோகத்தராக கடமையாற்றும் கத்தோலிக்க மணமகளுக்கு பெற்றோர் தகுந்த வரன் எதிர்பார்க்கின்றனர். தகவல்-களை மின்னஞ்சல் முகவரி pavalavasam@gmail.com அனுப்பவும்.

**மேலதிக தொடர்புகளுக்கு : 0772839127** (33301)

1991ம் ஆண்டு அழகிய தமிழ் அரசாங்க உத்தியோகம் செய்யும் பட்டதாரி கத்தோலிக்க மணமகளுக்கு பெற்றோர் தகுந்த வரன் எதிர்பார்க்கின்றனர். தகவல்-களை மின்னஞ்சல் முகவரி pavalavasam@gmail.com அனுப்பவும்.

**மேலதிக தொடர்புகளுக்கு : 0772839127** (33300)

கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த, 1980ம் ஆண்டு பிறந்த, க.பொ.த சாதாரண தரம் படித்த, நிவித்திகல இரத்தினபுரியைச் சேர்ந்த தையல் தொழில் செய்யும் மணமகளுக்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**மேலதிக தொடர்புகளுக்கு : 0779444187** (35990)

உங்களது விளம்பரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி : cgnanaoli@yahoo.com

## 05 பொதுநிலையினரின்...

### மறைத்தூதுப் பணிக்கான பயிற்சியும், தயாரிப்பும்

இல்லம் தோறும் நம் குடும்பங்களுக்குத் தேவை திருவிவிலியமாகும். “சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும்” என்பது போல், பொதுநிலையினருக்கு திருவிவியத்தை வாசிக்கவும், புரிந்துகொள்ளவும், அதன்பின் அதனை எடுத்து விளக்கவும், அறிவிக்கவும் தகுந்த பயிற்சி தரப்படவேண்டும். இதனை ஒவ்வொரு பங்கிலும், மறைமாவட்ட அளவிலும், குருத்துவ கல்லூரிகளிலும், பொதுநிலையினருக்கான திருச்சபையின் பல அமைப்புக்களின் மூலமாகவும் செய்திடலாம். மேலும் பொதுநிலையினர் இன்றைய காலச் சூழமைவைப் புரிந்து கொள்ளவும். மறைத்தூதுப் பணியை மிகச் சிறப்பாகச் செய்திடவும் அவர்களுக்கு ஆன்ம பயிற்சியுடன் வயது, வாழ்க்கை நிலை, திறமைகள் ஆகியவற்றின் வேறுபாட்டுக்கு ஏற்றபடி, இறையியல், அறநெறியில், மெய்யியல் ஆகியவற்றில் உறுதியான கல்விப் பயிற்சியும் இப்பொதுநிலையினருக்குத் தேவை” (பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம் எண் 29).

இத்தகைய பயிற்சியுடன், சமூகம் மற்றும் பண்பாட்டு பகுப்பாய்வும் தரப்பட வேண்டும். இத்தகைய பகுப்பாய்வின் மூலம்தான் திருச்சபையிலும், சமுதா-யத்திலும் எவ்வாறு அநீதி அமைப்புகள் வறுமையையும், ஒடுக்குமுறையையும் நிரந்தரமான ஒன்றாக தக்கவைத்துக் கொள்கின்றன என்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள். ஒட்டு மொத்தத்தில் பொதுநிலையினருக்கான பயிற்சி கிறிஸ்து மையமானதாக இருந்து, இயேசுவின் பார்வை, அவரது மனப்பாங்கு மற்றும் மக்களுக்கான அவரது அர்ப்பணம் ஆகியவற்றின் ஆழமானப் புரிதலைப் பெற” உதவிட வேண்டும்.

### முடிவாக...

பொதுநிலையினருக்கும் அருட்பணியாளர்-களுக்கும் இடையே தற்போது நிலவுகின்ற உறவு நிலை பற்றி நாம் விமர்சிப்பதோடு, அருட்பணியாளரின் மனப்பாங்கில் உண்மையான மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். பொதுநிலையினரின் வாழ்விலும், வளர்ச்-சியிலும் அருட்பணியாளர்கள் பங்கெடுப்பதோடு, இம்மண்ணில் இறையாட்சிப் பணியைத் தொடர்ந்து செய்திட பொதுநிலையினரின் மறைத்தூதுப் பணியை திட்டமிட்டு செயல்படுத்த பெருமளவில் அவர்களை ஊக்குவித்து உதவிட வேண்டும்.

மேலும் திருச்சபையிலும், சமூகத்திலும் பொது-நிலையினரில் ஒரு பகுதியான பெண்கள் இரட்டிப்பான முறையில் ஒடுக்கப்பட்டுள்ளார்கள். பெண்கள் விடுதலையடைந்தால் குடும்பங்களும், குழுமங்களும், திருச்சபைகளும், நாடுகளும் விடுதலையடையவும். எனவே ஆண்களைப் போலவே கடவுளின் சாயலில் உருவாக்கப்பட்ட பெண்கள் திருச்சபையின் இறையியல் சிந்தனை மற்றும் படிப்பில் பங்கேற்கவும், திருச்சபையின் முடிவெடுக்கும் செயல்பாட்டிலும், மறைத்தூதுப்பணி ஆற்றுவதிலும் முழுமையான பங்கேற்கவும், சம உரிமை பெற்றுள்ளார்கள். எனவே, ஆண் பொதுநிலையினருக்குச் சமமாக பெண் பொதுநிலையினரும் மறைத்தூதுப் பணியில் பங்கேற்றிட தலத்திருச்சபைகள் ஊக்குவிப்பது அவைகளின் கடமையாகும்.

# வருடாந்த திருவிழா

# புனித யூதா முனிந்திரர் திருத்தலம்

# இந்திகொல்ல



## ஒக்டோபர் 26 மற்றும் 27, 2019

**"புனித யூதா ததேயுவே!**
**எமது நாட்டை அனைத்து தீமைகளிலிருந்து**
**காத்திட இறைவனிடம் பரிந்து பேசும்"**

- ✷ **ஒக்டோபர் மாதம் 17ம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகும். அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு திருப்பலி இடம்பெறும்.**
- ✷ **ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி (வெள்ளி) முதல் 25ஆம் திகதி வெள்ளிவரை மாலை 6.45 மணிக்கு நவநாளும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும்.**

**✷ ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. மெக்ஸ்வெல் சில்வா ஆண்டகையின் தலைமையில் (வெஸ்பர்ஸ்) மாலை ஆராதனையும் தொடர்ந்து திவ்விய நற்கருணை திருப்பவனியும் இடம்பெறும்.**

**✷ ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி ஞாயிறு இடம்பெறும் திருப்பலிகள்**

- காலை 5.00 – சிங்கள மொழியில்
- காலை 6.00 – ஆங்கில மொழியில்
- காலை 7.30 – சிங்கள மொழியில்
- **காலை 8.30 கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர், அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில்** திருவிழாத்திருப்பலி மற்றும் யூதா முனிவரின் திருச்சுரூப பவனி இடம்பெறும்.
- காலை 10.30 – சிங்கள மொழியில்
- நண்பகல் 12.30 – ஆங்கில மொழியில்
- மாலை 7.00 – சிங்கள மொழியில்
- காலை 11.30 – தமிழ் மொழியில்
- மாலை 5.00 – சிங்கள மொழியில்

**✷ ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி (திங்கள்) யூதா முனிவரின் திருநாள் கொண்டாடப்படும். அன்றைய தின திருப்பலிகள்** (36140)

- காலை 6.30 – சிங்கள மொழியில்
- காலை 10.00 – சிங்கள மொழியில்
- காலை 11.30 – ஆங்கில மொழியில்
- மாலை 7.00 – சிங்கள மொழியில்

*மதிப்பிற்குரிய அருட்தந்தை ஜூட் ஷாமன் பர்னாந்து அடிகளார்*
*பங்கு பரிபாலகர்*
*புனித யூதா ததேயு திருத்தலம், இந்திகொல்ல*



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்